Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
33°c 28°c



**உலகம்**



பக். 03

தீராத பிரச்சினை. சீன- இந்திய எல்லைத் தொடர்பான பேச்சு நிறுத்தம்

**உள்ளூர்**



பக். 07

கிளி. டிப்போ காணியில் இனிமேல் தனியார் பஸ் நிலையமும்

**கட்டுரை**



பக். 09

நேற்றுத் தமிழர் - இன்று முஸ்லிம்கள் - நாளை பௌத்தரல்லாத சிங்களவர்

**விளையாட்டு**



பக். 16

பழைய பந்திலும் சிறப்பாகப் வீசுவேன்

# ஆட்சி கிட்டும்வரை போராட வேண்டும்

## மே தினத்தில் தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு அறைகூவல். இனத்தின் விடுதலையில்தான் தொழிலாளர் விடுதலை சாத்தியம் எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2

தமிழ் மக்கள் தமது நிலப் பிரதேசத்தை ஆட்சி செய்கிற அதிகாரம் கிடைக்கும் வரைக்கும் போராடியே ஆகவேண்டும் என்று மே தினத்தில் அறைகூவல் விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

''எமது இனம் விடுதலை அடைந்தால்தான் எமது தொழிலாளர்கள் விடுதலையடைவார்கள்'' என்று கூறினார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்றது. பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மாவை சேனாதிராசா**

''சர்வதேச நாடுகளால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ, இன்று மே தினம் கொண்டாடுகின்றார். இதுதான் ஆசியாவின் ஆச்சரியம்'' என்றார் மாவை. சேனாதிராசா.

தமிழர்களின் மண், இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் போராடித்தான் ஆக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

**பா.அரியநேந்திரன்**

தற்போது நிலவுவது நிரந்தர சமாதானம் இல்லை என்று கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன்

''நாங்கள் எங்கள் நிலத்துக்காகப் போராடுகின்றோம். வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே மட்டக்களப்பு மாவட்ட மக்களது விருப்பமும். அதனை நாங்கள் அடைவோம்'' என்றார் அவர்.

**சீ.யோகேஸ்வரன்**

''1961ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்ட செயலகங்களை முடக்கியதைப் போன்றதொரு மாபெரும் போராட்டத்தை நடத்த தமிழரசுக் கட்சி தயாராக இருக்கிறது'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன்.

''நாங்களே எங்களை ஆளும் காலம் விரைவில் வரும்'' என்று அவர் மேலும் கூறினார்.

வடக்கு - கிழக்கு தாயகத்தில் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலை வரவேண்டும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன். (உ-5)

(படங்கள்: பக்கம்-IV)

## மீண்டும் சேவைக்கு வந்தது வடதாரகை

யாழ்ப்பாணம், மே 2

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடுவதற்காகக் கட்டப்பட்ட 'வடதாரகை -II' பயணிகள் படகு ஒரு வழியாக நேற்றுத் தனது சேவையை மீண்டும் ஆரம்பித்தது.

இந்தப் படகு நெடுந்தீவு மக்களுக்காக 8 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது. ஆனால் சேவை ஆரம்பிக்கப்பட்ட சில நாள்களிலேயே அது இடைநிறுத்தப்பட்டது. நெடுந்தீவு துறைமுகத்துக்குள் படகைக் கொண்டு செல்ல ஆழம் போதாமல் இருந்ததே இதற்குக் காரணம்.

இதற்காக துறைமுகம் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டது. அதன் பின்னரும் படகு நெடுந்தீவு மக்களுக்காகச் சேவையாற்றவில்லை. தெற்கு சுற்றுலாப் பயணிகளை மட்டும் அவ்வப்போது ஏற்றி இறக்கி வந்தது. கச்சதீவுக்கு ஆண்டுக்கு ஒரு முறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஏற்றி இறக்கும் பணியிலும் ஈடுபட்டது.

இந்த நிலையில், நேற்று திடீரென வடதாரகை மீண்டும் தனது சேவையை நெடுந்தீவுக்கு ஆரம்பித்தது. குறிகாட்டுவானில் காலை 9 மணிக்கு நடந்த ஆரம்ப நிகழ்வில் வடமாகாண கடற்படை கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் டி.எஸ். உடவத்த, யாழ். மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதும் நெடுந்தீவுத் துறைமுகத்துக்குள் படகு

தொடர்ச்சி: பக்கம் 02





ஜே.வி.பியின் மே தின நிகழ்வு நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது. இந்த மே தின ஊர்வலத்தில் மின்கட்டண உயர்வுக்கு எதிரான கோஷங்களே அதிகம் எதிரொலித்தன.

## நிரந்தர நியமன போராட்டத்தில் ஆசிரியர்கள்

முல்லைத்தீவு,மே 2

நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை அகிம்சை வழியிலான தொடர் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாகத் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென பல்வேறு தரப்புக்களாலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அது இதுவரை சாத்தியமாக

தொடர்ச்சி: பக்கம் 02

## இலங்கை மீது அமெ. இனி நேரடி அழுத்தம்

### இராஜாங்க திணைக்களம் அறிவிப்பு

நியூயோர்க்,மே 2

இலங்கையில் இடம்பெற்றுள்ள பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியும், பொறுப்புக்கூறலும் நிலை நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்துவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை மீது இனி நேரடியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் பற்றிக் வென்ரெல் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையை அமெரிக்க அரசு கவனத்தில் எடுத்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அந்த அறிக்கையானது அமெரிக்கா

தொடர்ச்சி: பக்கம் 02

## பொலிஸ் நிலையத்துக்கும் நெல்லியடியில் சுவீகரிப்பு

### ஒட்டப்பட்டது அறிவித்தல்

பருத்தித்துறை,மே. 2

காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் நெல்லியடியில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்குத் தனியார் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் கடந்த இரு நாள்களுக்கு முன்பு ஒட்டப்பட்டுள்ளது.

இந்தக் காணி, நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் நாவலர் மடச் சந்தியிலிருந்து கிரிப்பல்லி எனும் இடத்துக்குச் செல்லும்பாதையில் உள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/351 கரணவாய் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்டது. காணி எடுத்தல் சட்டத்தின் பிரகாரம் யாழ். மாவட்ட காணி அபிவிருத்தி அமைச்சால் 2013.04.22ஆம் திகதியிடப்பட்டு, யாழ்.

தொடர்ச்சி: பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை உடைக்க சதி முயற்சியில் அரசு

## தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் சாடல்

யாழ்ப்பாணம், மே.2
பல கட்சிகளைப் பிரித்த இந்த அரசு, இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பிரிக்கச் சதி செய்கின்றது. நாங்கள் ஒற்றுமையாக இருந்து போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே எமது இனத்தின் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற மே தினக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அங்கு அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

**பா. அரியநேந்திரன்**
"தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் உடைப்பதற்காகச் சில சக்திகள் கட்சியினுள்ளும் ஊடுருவியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றது. பல கட்சிகளை உடைத்த இந்த அரசு எங்களையும் பிரிக்க முயல்கிறது.
நாங்கள் தமிழர்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் மாத்திரமே விடுதலையைப் பெற முடியும்"-என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன்.

**சி.சிறீதரன்**
"தமிழினத்தின் தாங்கு சக்தியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கப் பலவேலைகள் நடக்கின்றன. ஏற்கனவே ஒரு அரங்கம் உருவாக்கினார்கள்.
இப்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கின்றார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் விரும்பினால் இணைந்து வரலாம் என்று. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை அழிப்பதற்கான முயற்சி இதுவென்பதை அவர்கள் இனித்தான் உணர்வார்கள்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிதறடிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறடிக்கப்படப் போகின்றது" -என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

**சீ.யோகேஸ்வரன்**
நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்ததாவது:
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சிதைக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆனால் எங்கள் தலைமை எல்லோரையும் அரவணைத்துச் செயற்படுகின்றது.
ஒரு காலத்தில் எங்கள் இனத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள், அரசின் தொங்குபாலமாகச் செயற்பட்டவர்கள் எல்லோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் நாங்கள் அவ்வாறு செய்தோம்? எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதற்காகவே. ஆனால் எங்களுக்குள் வந்த பின்னர் எங்களுக்கே சதி செய்தால் விடமாட்டோம்.

**மாவை சேனாதிராசா**
"எங்களுக்கு கட்சியில் பதவி ஆசையில்லை. ஆனால் [illegible] சரியானவர்களின் கைகளுக்குச் செல்ல வேண்டும்"-என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.
(த-5)

# இலங்கையில் மாநாடு நடத்த அனுமதி பொதுநலவாயத்துக்கு பெரும் தோல்வி

### கடுமையாக விமர்சிக்கிறது கனடா

மொன்றியல்,மே.2
இந்த ஆண்டில் பொதுநலவாயத் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்த அனுமதித்ததன் மூலம் மிகப்பெரிய சோதனை ஒன்றில் பொதுநலவாயம் தோல்வியடைந்துள்ளது என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்தார்.
எனினும் பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகும் எண்ணம் கனடாவுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.
கனேடிய நாடாளுமன்றத்தின் பொதுச்சபை வெளிவிவகாரக் குழுவின் முன்பாக நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், இலங்கையின் நிலைமைகள் மோசமடைந்து வருவது குறித்தும், இலங்கை அரசின் அதிகாரப் போக்கு தொடர்பாகவும், தாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.
பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜோன் பயார்ட், கனடா மட்டும்தான், ஒட்டுமொத்த பொதுநலவாய அமைப்பிலும் உள்ள மோசமான நிலைமையை வெளிப்படுத்தி வருகின்ற ஒரே நாடாக உள்ளது, இது ஒரு சோதனை என்று நான் நினைக்கிறேன் என்று தெரிவித்தார்.
அதேவேளை இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவுக்கு அப்பால் கனடா எடுக்கக் கூடிய ஏனைய நடவடிக்கைகள் என்னவென்று ஜோன் பயார்ட் கூறவில்லை.
கனேடிய அரசுக்குப் பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகும் எண்ணம் உள்ளதா? என்ற கேள்விக்கு அவர், இப்போது இல்லை என்று பதிலளித்துள்ளார்.
அதேவேளை, கனேடிய அரசும் கனேடிய இராஜதந்திரிகளும் இந்த விவகாரத்தில் ஏனைய பொதுநலவாய நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகவும், ஆனாலும், அந்த முயற்சிகள் வெற்றிபெறாததற்கான காரணம் குறித்து கருத்து வெளியிடப் போவதில்லை என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.
(த)

## மீண்டும் சேவைக்கு வந்தது வடதாரகை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லமுடியாத நிலையே இருக்கிறது. எனவே துறை முகத்துக்கு வெளியே வடதாரகையில் இருந்து பயணிகளை இறக்குவதற்கும் நெடுந்தீவில் இருந்து படகுக்கு ஆள்களை ஏற்றுவதற்கும் என மூன்று தனியார் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.
'வடதாரகை' படகு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. ஆனால் அதனை இப்போதும் கடற்படையே தனது வசம் வைத்துள்ளது.
ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து புறப்பட்ட 'வடதாரகை' யில் 75க்கும் மேற்பட்டவர்கள் நெடுந்தீவுக்குப் பயணமானார்கள். (உ-7,86)

## பொலிஸ் நிலையத்துக்கும் நெல்லியடியில் சுவீகரிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரியால் கையொப்பமிடப்பட்டு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. குறித்த காணிச் சொந்தக்காரர் புலம்பெயர்ந்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

## நிரந்தர நியமன போராட்டத்தில் ஆசிரியர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வில்லை என்றும் இவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
தமது நியமனம் தொடர்பில் எழுத்து மூலமான வாக்குறுதி கிடைக்கும் வரை அகிம்சை வழியிலான தொடர் போராட்டத்தில் தாம் குதிக்கவுள்ளனர் என்று முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர். (க-500)

# மே தின மேடையில் மயங்கினார் மாவை



கிளிநொச்சி,மே.2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினப் பிரகடனத்தை வாசித்துக் கொண்டிருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திடீரென மயக்கமடைந்தார்.
கிளிநொச்சிப் பிரதேச சபையின் திறந்த வெளி அரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.
மதியமளவில் கொளுத்தும் வெயிலில் நின்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்ற ஆரம்பித்தார்.
உரையின் ஆரம்பத்திலேயே, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்த வலி.வடக்கு மக்களின் போராட்டத்தில் வெயிலில் நின்றதால் ஏற்பட்ட வருத்தம் இன்னும் மாறவில்லை என்று குறிப்பிட்டார்.
சுமார் அரைமணிநேரம் ஆக்ரோஷமாக உரையாற்றிய பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின பிரகடனத்தை வாசிக்க ஆரம்பித்தார்.
திடீரென தடுமாறத் தொடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் தண்ணீர் பருகி விட்டு பிரகடனத்தைத் தொடர முயன்றார்.
இருப்பினும் மீண்டும் பிரகடனத்தைத் வாசிக்க முடியாமல் அவர் தடுமாறத் தொடங்க, சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சபைத் தவிசாளர்கள் மேடையில் ஏறி அவரைப் பத்திரமாகப் பிடித்து கீழே இறக்கினர்.
சிறிது நேரத்தின் பின்பே அவர் மயக்க நிலையிலிருந்து மீண்டார்.
(த-5)

# 'உதயன்' தாக்குதல் விவகாரத்தை முன்னிலைப்படுத்துகிறது அமெ.

வொஷிங்டன்,மே.2
சுதந்திர ஊடகப் பரப்புரையை முன்னெடுத்து வரும் அமெரிக்கா 'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல் விவகாரத்தை முன்னிலைப்படுத்திச் செயற்படவுள்ளதாகக் கூறியுள்ளது.
வொஷிங்டனில் நேற்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பதில் பிரதி பேச்சாளர் பற்றிக் வென்றெல்,செய்தியாளர்களுடனான சந்திப்பின் ஆரம்பத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:
'உதயன்' தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டுள்ளது. அதன் நாளிதழ்கள் எரிக்கப்பட்டுள்ளன. அதன் இயந்திரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதன் பணியகம் கூட எரிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் உதயனுக்கு அப்பாலும் விரிவாகியுள்ளது.பி.பி.ஸியின் தமிழ்ச் சேவையில் இலங்கை தொடர்பான, ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்பான நிகழ்ச்சிகள் தணிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.
முக்கியமான அரசியல் கேலிச்சித்திர வடிவமைப்பாளர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்டுக் காணாமற்போயுள்ளார்.
ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட, கொல்லப்பட்ட எல்லாச் சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடத்தி குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்துவதன் மூலம், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பாக தமக்குள்ள கடப்பாட்டை நிரூபிக்கும்படி இலங்கை அதிகாரிகளை அமெரிக்கா கேட்கிறது.
ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும்படி இலங்கை அதிகாரிகளை நாம் கேட்டுக் கொள்கிறோம்.
இந்த அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நிறைவேற்ற வேண்டிய தேவை மட்டுமல்ல. இது இலங்கை அரசின் சொந்த ஆணைக்குழுவான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையும்கூட.
எமது மனித உரிமைகள் அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள பல்வேறு கவலைகள், சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையிலும் எதிரொலித்துள்ளன.
நாம் பல தடவைகள் கூறியுள்ளது போலவே, இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு உள்ள அச்சுறுத்தல் குறித்து கவலை கொண்டுள்ளோம்- என்றார்.
(த)

# இலங்கை மீது அமெ. இனி நேரடி அழுத்தம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது மனிதவுரிமை அறிக்கையில் தெரிவித்திருந்த பல கவலைகளை பிரதிபலிப்பதாக உள்ளது எனவும் கூறியுள்ளார்.
இலங்கை விடயத்தில் எதிர்காலத்தில் அமெரிக்கா என்ன செய்யப்போகின்றது என்று பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்குப் பதிலளித்த அவர்; இலங்கையுடன் இருதரப்பு முறையில் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறோம்- என்றார்.
சர்வதேச மட்டத்தில் உண்மையாக இதில் அக்கறை கொண்டுள்ள தரப்புக்களுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை உள்ளன. எனவே எமது கவலைகளை தொடர்ந்து வலியுறுத்துவோம்- என்றார் அவர்.
(த-ப)

# 11 இலங்கை மீனவர் ஆந்திராவில் கைது

ஆந்திரா,மே.2
இந்தியாவின் ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தின் காக்கிநாடா கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 11 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீனும் உபகரணங்கள் சிலவும் மீட்கப்பட்டதாக காக்கிநாடா பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தியாவில் 45 நாட்கள் மீன்பிடி தடை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய கடற்பரப்பில் நுழைந்து இலங்கை மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

**இவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது**

## இ.தொ.கா. ஆதரவாளர் சாவு

கொழும்பு,மே.2
மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றுகொண்டிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளரொருவர் உயிரிழந்துள்ளார்.
பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த ஆதரவாளர், அக்கரபத்தனை பிரதேசத்தில் வைத்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் நுவரெலியாவில் நேற்று மாலை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் துவாரம்

நியூயோர்க், மே 2
எரிகல் மோதியதால் சர்வதேசவிண்வெளிஆய்வுநிலைய சூரியத் தகட்டில் துவாரம் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்து 1998 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியன.
பூமியில் இருந்து சுமார் 370 கி.மீற்றர் தொலைவில் சுற்று வட்டத்தில் சுற்றி வருகின்ற விண்வெளி நிலையம், பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.
இந்தநிலையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சூரிய ஒளித் தகட்டில் துவாரம் ஏற்பட்டுள்ளதாக கனடா விண்வெளி வீரர் கிறிஸ் ஹாட்பீல்டு கூறியுள்ளார்.
அண்மையில் விண்வெளி மையத்தைச் சுற்றி விண்வெளி நடை (ஸ்பேஸ் வாக்) மேற் கொண்டபோது, இந்தத் துவாரத்தைக் கண்டுபிடித்ததாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.
மேலும் துவாரம் விழுந்த இடத்தை புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளார்.
விண்ணில் சுற்றி வருகின்ற எரிகல் மோதியதால் இந்தத் துவாரம் விழுந்திருக்கலாம் என்றும், முக்கிய பாகங்களில் எரிகல் ஊடுருவியிருக்க முடியாது எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (வ)


## பங்களாதேஷ் விபத்து: உரிமையாளர்களின் சொத்து பறிமுதல்

டாக்கா, மே 2
பங்களாதேஷில் கட்டடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில், கட்டட உரிமையாளர்களின் சொத்துக்களை முடக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த வாரம் 8 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 386 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது குறித்த வழக்கு விசாரணை நடைபெற்றுவருகின்றது. இந்த நிலையிலேயே கட்டட உரிமையாளர்களின் சொத்துக்களை உடனடியாக முடக்கி பறிமுதல் செய்யவேண்டும் என்று நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
சொத்துக்களை விற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ற)



# தீராத பிரச்சினை

### இந்திய எல்லை விடயத்தில் நிபந்தனை விதிக்கிறது சீனா



பீஜிங், மே 2
இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர் என்று கூறப்படும் சீன இராணுவத்தினரை மீள அழைக்க வேண்டுமெனில் புக்சி மற்றும் லடாக்கின் சுமர் பகுதியில் உள்ள இந்தியப் படைகள் பின்நகர வேண்டும் என்று சீனா வலியுறுத்தி உள்ளது.
இதுகுறித்து சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில்,
''புக்சி மற்றும் சுமர் உள்ளிட்ட எல்லைப் பகுதிகளில் இந்தியா தனது எல்லை பாதுகாப்பு கட்டமைப்புக்களை மாற்றி அமைக்க வேண்டும். சீனப் படைகளை நோக்கிய இந்தியாவின் படைக் காவலரண்களை பின்நகர்த்த வேண்டும். எமது கோரிக்கைகளை இந்தியா ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே சீனா தனது அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்ய முடியும்,'' என்று தெரிவித்துள்ளது.
இதேவேளை, சீனாவின் இவ்வாறான நிபந்தனைகள் பிரச்சினையைப் பெரிதாக்குமே தவிர குறைப்பதாக ஒரு போதும் அமையாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.
''சீனாவுடனான பேச்சுக்களில் எதிர்பார்த்த முடிவு எட்டப்படவில்லை. இந்தியப் படை களை திரும்பப் பெறுமாறு அவர்கள் வலியுறுத்தி உள்ள னர். எனினும் நாங்கள் சில முடிவுகளைத் தெரிவித்துள்ளோம். இடம்பெற்ற பேச்சுக் கள் திருப்தியானதாக அமையவில்லை,'' என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குர் ஷித் சிங் தெரிவித்துள்ளார்.
பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதியில் இந்திய இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

### சிரியாவில் இரசாயனப் பாவனை

# அமெரிக்கா - ரஷ்யா அவசர ஆலோசனை

நியூயோர்க், மே 2
சிரிய இரசாயன ஆயு தங்கள் தொடர்பான தமது கவலையை ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கவனத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொண்டுவந்துள்ளார்.
சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்த அமெரிக்கா முயறசிகளை மேற்கொண்டு வருகின்றது.
கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை சிரியா பயன்படுத்தியதாக புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி கடந்த வாரம் அமெரிக்கா அறிக்கை வெளியிட்டிருந்தது.
சிரியா மீது அமெரிக்கா விமர்சனங்களை முன்வைத்து வருகின்ற போதிலும், பஷார் அல் அசாத்துக்கு ரஷ்யா தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது.
இந்தநிலையில், சிரியா நிலைமைகள் குறித்து ஒபாமாவும்,புடினும் மீளாய்வு செய்துள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிரியா விவகாரம் தொடர்பில் இணைந்து செயற்பட இரண்டு நாடுகளின் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். அத்துடன், இதுகுறித்து அமெரிக்கா இராஜங்க செயலாளர் ஜோன் ஹெரி மற்றும் ரஷ்யா வெளி விவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோ ஆகியோர் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.(வ)

# தேர்தல்களில் போட்டியிட முஷாரப்புக்கு ஆயுள் தடை

### பெனாசீர் பூட்டோ கொலை வழக்கின் எதிரொலி



இஸ்லாமாபாத், மே 2
பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அந்த நாட்டு மேல் நீதிமன்றம் வாழ்நாள் தடை விதித்து தீர்ப்பளித்துள்ளது.
பெனாசீர் பூட்டோ கொலை, நீதிபதிகளை கைது செய்து சிறையில் அடைத்தமை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்ட முஷாரப், கைது நடவடிக்கையை தவிர்ப்பதற்காக வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருந்தார்.
பின்னர் அரசியல் கட்சியை ஆரம்பித்த அவர், எதிர்வரும் 11ஆம் திகதி நடை பெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தனது செல்வாக்கை நிலை நாட்ட முயன்றார். இதற்காக கடந்த மாதம் நாடு திரும்பிய அவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் அவரது நீதிமன்றக் காவல் தற்போது நீடிக்கப்பட்டுள்ளதால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையே முஷாரப் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று அவரது வழக்கறிஞர்கள், பெஷாவர் மேல் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.
அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், அவர் தேர்தல்களில் போட்டியிட நீதிமன்றம் வாழ்நாள் தடை விதித்துத் தீர்ப்பளித்தது.
இருப்பினும், இந்தத் தடை உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்போவதாக அவரது வழக் கறிஞர்கள் அறிவித்துள்ளனர். (வ)

# காஸா மீது தாக்குதல்

### ஒருவர் சாவு; பாலஸ்தீனியர்கள் கொதிப்பு



ஜெருசலேம், மே 2
பாலஸ்தீனம் காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
தற்போது பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் உள்ள நிலையில் இஸ்ரேலின் இந்த வான்வெளித் தாக்குதலால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
வான்வழித் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பாலஸ்தீனம் வெஸ்ற்பாங் நகர்பகுதியில் மக்கள் இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.
இஸ்ரேல் குடியிருப்புக்களை அமைத்து வரும் இஸ்ரேலின் மேற்குப் பகுதியிலும் இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைப் பாலஸ்தீனியர்கள் நடத்தினர். (ற)

# நீண்டகாலத்தின் பின் ரி.வியில் மண்டேலா



ஜொகன்னர்ஸ்பேர்க், மே 2
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (வயது-94) நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தொலைக்காட்சி நிகழ்வில் தோன்றினார்.
மண்டேலா கடந்த இரண்டு ஆண்டுகளாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வருகிறார். அவர் உடல் நிலை குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகின.
இந்தநிலையில் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா, நெல்சன் மண்டேலாவைச் சந்தித்து உரையாடும் காட்சிகளை அங்குள்ள தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒளிபரப்பின. மண்டேலாவின் உடல் நிலை நன்றாக இருப்பதாக அவரைச் சந்தித்த ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா தெரிவித்தார். ஆனால் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான காட்சிகளில் மண்டேலா எதுவும் பேசவில்லை.
சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் தொலைக் காட்சியில் தோன்றிய மண்டேலா மிகவும் பலவீனமாகக் காணப்பட்டதுடன் அமைதியாக ஒரே இடத் தில் அசையாமல் உட்கார்ந்திருந்தார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.
பக்கவாதம், நுரையீரல் பிரச்சினைகளால் வைத்திய சிகிச்சை பெற்று வந்த மண்டேலா கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் வீடு திரும்பினார். (வ)

# 138 வருடங்களின் பின் பெல்லின் குரல் மீட்பு



லண்டன், மே 2
138 ஆண்டுகளுக்குப் பின்னர் அலெக்ஸாண்டர் கிரஹம் பெல்லின் குரல் பதிக்கப்பட்ட தகடு மீட்கப்பட்டுள்ளது.
தொலைபேசியை கண்டு பிடித்த அலெக்ஸாண்டர் கிரஹம் பெல். அதன்பின் ஒலிப்பதிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்ட வேளையில் தனது குரலை ஒரு தகட்டில் பதிவு செய்து வைத்தார். அந்தத் தகட்டில் பதியப்பட்டிருக்கும் கிரஹாம் பெல்லின் குரலை, கணினி யின் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மீட்டெடுத்துள்ளனர்.
தொலைபேசி கண்டு பிடிப்புக்காக அறியப்பட் டிருந்தாலும், கிரஹாம் பெல் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பல இயந்திரங்களைக் கண்டு பிடித்துள்ளார். 1847 ஆம் ஆண்டு பிரிட்டனில் கிரஹம் பெல் பிறந்தார்.
உலகின் கவனத்தை ஈர்த்த முக்கிய அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடிப்பாளர்கள் வரிசையில் இவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்.
அவர் 1876 ஆம் ஆண்டு தொலைபேசியைக் கண்டு பிடித்து தகவல் தொடர்பில் புரட்சி ஏற்பட அடிகோலினார். தொலைபேசியைக் கண்டுபிடித்த பின் 9 வருடங்கள் கழித்து அவர் புதிய முயற்சியாக, குரலை பதிவு செய்யும் கண்டுபிடிப்பில் ஈடுபட்ட போது 1885.04.15 அன்று அவரது குரலை மெழுகு தடவிய கடதாசித் தகட்டில் பதிவு செய்துள்ளார். இது அமெரிக் காவில் உள்ள சுமித் சோனியன் அருங்காட்சியகத்தில் பழைமையான ஒலித் தகடுகள் பாதுகாக்கும் பிரிவில் 138 வருடங்களாக பாதுகாக்கப் பட்டு வந்தது. (வ)

## இத்தாலி ஊடகவியலாளர் சிரியாவில் மாயம்

டமாஸ்கஸ், மே.2
சிரியாவில பணியாற்றிய இத்தாலியின் முன்னணி ஊடகவியலாளர் ஒருவர் காணாமற்போயுள்ளார்.
போர் தொடர்பான அனுபவமிக்க டொமேனிக்கோ குயிரிக்கோ எனும் 62 வயதான ஊடகவியலாளரே கடந்த 20 தினங்களாக காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.
கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி லெபனானில் இருந்து சிரியாவுக்குள் அவர் பிரவேசித்ததுடன், கடந்த 9 ஆம் திகதி முதல் அவருடனான தொடர்புகள் அற்றுப் போயுள்ளன.
சிரியாவில் தொடரும் உள்நாட்டுப்போர் அங்கு ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் கடினமான சூழலை உருவாக்கியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு ஊடகவியலாளர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலான நாடாக சிரியா பதிவாகியுள்ளதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்திருந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன் விளம்பர தொடர்புக்கு: 0215671111**

**கிளி/ மாவட்ட வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம்**

**சங்கம் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்**

இடம்: பிரதேச சபை மண்டபம் (கரைச்சி)
காலம்: நாளை (03.05.2013) வெள்ளிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி

மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளதனால் பதிவினை மேற்கொண்ட அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கிளி/ மாவட்ட வாடகை
முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்
சங்கம், இரத்தினபுரம். நிர்வாகத்தினர்.


# தண்டவாள ஆணிகள் 1,300 திருட்டு

மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையில் புதிதாக நிறு வப்பட்டு வரும் ரயில் பாதையில் தண்டவாளங்களைப் பொருத்தியிருந்த 1,300 ஆணிகள் களவாடப்பட்டுள்ளதாக மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றின் பெறுமதி 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என்று பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் அதிகாரி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் தொழிலாளர்கள் கடந்த 11 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரையில் விடுமுறை பெற்றுச் சென்றிருந்த காலகட்டத்திலேயே அவை களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-22)


**விற்பனைக்கு**
முதிரை அலுமாரி விற்பனைக்குண்டு
(கடைப் பாவனைக்கு உகந்தது)
தொடர்பு:- 077 816 8158, 071 483 8386

**புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு**
நியூ பேனாட், வகிறா, C.I.C கிறீன்வெலி, புசலாவ சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
(மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.
தொடர்பு: 077 595 9663
விநியோகத்தர்: மகாபாம் ஹவுஸ்

**வாடகைக்கு**
A.K.R. HOTEL இல் அமைந்துள்ள உணவகம் ஒன்று சகல கட்டட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 446 6802


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



செல்வன். **மகாலிங்கம் சதீஷன்**
பணிப்பாளர்
(பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)

அகவை மூன்று சென்ற போதிலும்
அன்பு கொண்ட உன் நினைவு நீங்கவில்லை எம்மை விட்டு
அவனியில் நீ என்று உதிப்பாய் - என்று
இந்நாள் வரை காத்திருக்கிறோம்.

ஆறுதில்லை உன்னை விட்டு எம்மனம்
ஆனாலும் நிறுத்துவதில்லை உன் முயற்சி.....

என்றும் உன் நினைவுடன் உறவுகள்

மலர்வு 09.09.1984 உதிர்வு 02.05.2010

பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் அருளானந்தம் சத்தியேந்திரன்

தோற்றம் - 16.05.1953
மறைவு - 21.05.2012



எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும், பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் இந்த நினைவு
அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

89, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில் வதியும் சாவகச்சேரி கோவில்குடியிருப்பைச் சேர்ந்த இரத்தினம் ரவீந்திரன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பெறுமதிமிக்க கணினி சேவரை (Computer Server) அன்பளிப்பாக வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க தலைவர் யோ.ஜெயக்குமாரிடம் கையளிக்கின்றார். (வ-9)

## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, மே 2

புத்தூர் வண்ணாத்திப் பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற சைக்கிள், மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறன்று இரவு இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த சைக்கிளில் பயணித்த மட்டுவில் மத்தியைச் சேர்ந்த தியாகராசா வைத்தீஸ்வரன் (வயது- 65) என்பவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த புத்தூரைச் சேர்ந்த செல்வன் சுதாங்கரன் (வயது-31) என்பவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ-9)

## செஞ். சங்க புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், மே 2

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கல்விப் புலமைப் பரிசில்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்காக இந்தக் கல்விப் புலமைப் பரிசில் திட்டம் 2013/2015 ஆம் ஆண்டுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் மூலமொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.

வருமானம் வருடத் துக்கு 54 ஆயிரம் ரூபா அல் லது அதற்குக் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட தகைமையுடையவர்கள் முழுமையாக பூர்த்தி செய் யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக, செயலாளர் செஞ்சிலுவை புலமைப் பரிசில் நிதியம், இலங்கை செஞ்சிலு வைச் சங்கம் 104, தர்மபால மாவத்தை, கொழும்பு 7. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையுடன் தொடர்பு கொள்ள முடியும். (ஐ-7)

### பாஷையூர் கடற்றொழிலாளர்களுக்காக

# வலைகள் பழுது பார்க்கும் மண்டபம் காயவிடும் திடல் அமைக்க ஏற்பாடு

கொழும்புத்துறை, மே2

பாஷையூர் கடற்றொழிலாளர்களின் நலன் கருதி வலைகள் பழுதுபார்க்கும் மண்டபம் மற்றும் வலைகள் காயவிடும் திடல் என்பன அமைக்கப்படவுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாஷையூரில் புனரமைக்கப்பட்டுவரும் மீனவர் இறங்கு துறைப் பகுதியை ஆழமாக்கியிருந்தனர். இதன்போது அகழப்பட்ட மண்ணைக் கொண்டு துறைக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள கடற்கரைப் பகுதியை நிரவி அதில் மண்டபம் மற்றும் தொழிலாளர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ந-135)

> “தொழிலாளர்களுக்கு தேவையான வசதிகளை ஏறபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# கருவாடு பதனிடும் தொழிலில் ஈடுபட வலைப்பாட்டில் 30 பெண்களுக்கு பயிற்சி

## தலா ரூ.15 ஆயிரம் வழங்கியது ஹரித்தாஸ்

பூநகரி,மே2

வலைப்பாடு கிராமத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ள ஹரித்தாஸ் நிறுவனம், கருவாட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக 30 பெண்களுக்கு 15ஆயிரம் ரூபாவீதம்வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் வலைப்பாடு கிராமத்தில் மீள்குடியேறிய மீனவ குடும்பங்களில் அநேகமான குடும்பங்கள் தொழிலில் ஈடுபடுவதற்குப் பொருளாதார வசதியின்றி வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்குத் தொழில் ரீதியாக வருமானத்தைப் பெறுக் கொடுக்க முன்வந்துள்ள ஹரித்தாஸ் நிறுவனம், வறுமைக் கோட்டுக்குட்பட்ட 30 பெண்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு கருவாடு பதனிடுவது பற்றி மூன்று தினங்கள் பயிற்சி வழங்கியதுடன், ஒவ்வொருவருக்கும் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக ரூபா 15 ஆயிரம் நிதியுதவி வழங்கியுள்ளது. (ஒ-15)

# தங்க இடம் கொடுத்தவரின் ஓட்டோவை விற்ற நபர் கைது

நவாலி, மே2

நவாலியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த தென்பகுதியைச் சேர்ந்த நபர் அந்த வீட்டுக்காரரின் ஓட்டோவை எடுத்துச் சென்று விற்று பணம் பெற்றுச் சென்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸார் அவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

நவாலி வடக்கு புலவர் வீதியைச் சேர்ந்த ஒருவர் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த தனது நண்பரொருவருக்கு தனது வீட்டில் சில காலம் தங்க இடம் கொடுத்திருந்தார். மூன்று மாதங்கள் தங்கியிருந்த அவர் அந்த வீட்டாருடன் உறவாடி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் குறித்த நபர் வீட்டுக்காரரின் பாவனையிலிருந்த ஓட்டோவை , தான் யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளதாக கூறி அதைப் பெற்றுச் சென்றிருந்தார். இரு தினங்கள் சென்றும் அவர் திரும்பி வராததால் ஓட்டோவுக்குச் சொந்தக்காரர் எட்டியாந்தோட்டையிலுள்ள குறித்த நபரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கு அவரைச் சந்தித்து ஓட்டோவைத் தருமாறு கேட்டபோது அது 80 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த ஓட்டோவின் சொந்தக்காரர் மிகவும் தந்திரமாக அந்த நபரை நவாலிக்கு அழைத்து வரும்போது இரகசியமாக மானிப்பாய் பொலிஸாருக்கும் தகவல் கொடுத்திருந்தார்.

இந்த வேளை இவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அங்கு தயாராக நின்ற பொலிஸாரைக் கண்டு சம்பந்தப்பட்ட நபர் ஓட்டம் பிடிக்கவே பொலிஸ் அதிகாரி சந்தன சில்வா தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் கலைத்துச் சென்று சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

அதன் பின் அவரை விசாரணை செய்தபோது பிற்பொக்கற் அடிப்பவரென்றும், பல கைத் தொலைபேசிகளை திருடியுள்ளாரென்றும் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தில் அவர் ஒப்படைக் கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.(வ-100)

> “எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த தனது நண்பரொருவருக்கு தனது வீட்டில் சில காலம் தங்க இடம் கொடுத்திருந்தார். மூன்று மாதங்கள் தங்கியிருந்த அவர் அந்த வீட்டாருடன் உறவாடி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.



சாவகச்சேரி நீதிமன்றச் சட்டத்தரணி சண்முகலிங்கம் சிவரூபன் உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும் சமாதான நீதிவானாகவும் நீதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதைக் காணலாம். (ந-9)



கொடிகாமம் மத்தி முன்பள்ளி மழலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் முன்பள்ளி ஆசிரியை சி.சிறிலதா தலைமையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம)

## பெருந் திருவிழா

சாவகச்சேரி பெரிய மாவடி உளுத்தம்புலம் பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்திருவிழா மே 4ஆம் திகதி நிறைவுபெறும்.(ந-9)

## பட்டியிலும் திருட்டு

### கவலையில் மீனவர்

கொழும்புத்துறை,மே 2

பாஷையூர்ப் பகுதி கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் பகுதிகளில், கம்புகள், பட்டியிலுள்ள மீன்கள் என்பவற்றை இனந்தெரியாதோர் திருடிச் செலவதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடிப் பட்டிகளில் தாம் நட்டுவிட்டு வரும் கம்புகளையும் மீன்களையும் இரவோடு இரவாக அபகரித்துச் செல் லும் மனிதாபிமானமற்ற களவுகள் நீண்ட நாள்களாக இடம்பெற்று வருவதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதனால் பொருள் இழப்புக்களைச் சந்திப்பதோடு, மீன்கள் இன்றி ஏமாற்றத்துடன் திரும்பிவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வாழ்வாதாரப் பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்களை நிறுதத கடற்றொழிலாளர் சங்கங்கள் முன்வர வேண்டுமென தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-135)

# மூன்று கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே2

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மூன்று பொதுக் கிணறுகள் உடனடியாக புனரமைக்கப்படவுள்ளதாகச் சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கொக்குவில் பொற்பதி வீதி, செபஸ்ரியார் வீதி மற்றும் கோட்டைக்காடு இந்து மாயானத்தில் உள்ள மூன்று கிணறுகள் இவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்தில் பாவனையின்றி இருக்கும் கிணற்றைப் புனரமைத்து அங்கு தகனக்கிரியைகளுக்காக வருவோரின் தேவைகளுக்குப் பயன்படுத்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

மற்றைய இரு நன்னீர் பொதுக் கிணறுகளும் புனரமைக்கப்பட்டு [illegible] தேவைக்கு பயன்படுத்த [illegible] மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ந-1[illegible])

## இடம் மாறிய கிராம அலுவலகம்

தென்மராட்சி, மே2

சாவகச்சேரி பெரிய அரசடி, தாமோதரம்பிள்ளை வீதியில் இயங்கி வந்த சங்கத்தானைப் பிரிவு கிராம அலுவலர் அலுவலகம் பெரியமாவடியில் உள்ள தம்பு என்பவரின் வீட்டில் இயங்குவதாக கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

# காது, மூக்கு, தொண்டை கிளினிக்கை வாரத்தில் இரு நாள்கள் ஆக்குங்கள்

## நிர்வாகத்திடம் மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,மே 2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை காது, மூக்கு, தொண்டை கிளினிக் நோயாளர்கள், கிளினிக்குகளை வாரத்தில் இரு தடவைகள் நடத்துமாறு நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை கிளினிக் நோயாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த மாதம் 22 ஆம் திகதி கிளினிக் ஆரம்பிக்கப்பட்டது. பிரதி திங்கட்கிழமைகளில் பிற்பகல் 1 மணிக்கு கிளினிக் நடைபெறுமென அறிவிக்கப்பட்டதால் கடந்த திங்கட்கிழமை பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

வாரம் 50 நோயாளர்களே பார்வையிடப்படுவரென அறிவிக்கப்பட்டதால் தூர இடங்களிலிருந்து வரும் காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றின் நோயாளர்கள் கிளினிக்கில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் வாரத்தில் இரு தடவைகள் கிளினிக்குகளை நடத்தி உதவுமாறு நிர்வாகத்தினரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதேவேளை - அரிசி ஆலை உட்பட்ட தொழிற்சாலைகளில் ஏற்படும் இரைச்சல்களினால் அங்கு பணிபுரிவோர் தொழில் நிமித்தம் பாதிப்புக்கு உள்ளாவதை தடுக்க தம்மையும் கிளினிக்கில் பரிசோதனை செய்ய ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறும் கோரியுள்ளனர். (ந-9)



வடமராட்சி கருக்கொழுந்துக் கழகம் இளைஞர், யுவதிகளுக்கென நடத்திவரும் கணினிப் பயிற்சி தொகுப்பின் ஆரம்ப நிகழ்வில் பயிற்சிப் போதனாசிரியர் ஜே.பற்றிக் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் கழகத் தலைவர் வி.சிவச்சந்திரன் நிற்பதையும் காணலாம். (ந-8)



மானிப்பாய் பொலிஸாரும் வர்த்தகர் சங்கமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி செந்தூர்சேனன் மங்கல விளக்கேற்றுகின்றார். அருகில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம்பேஜ், உதவி பொலிஸ் அதிகாரி ஆகியோர் நிற்பதைக் காணலாம். (ந-100)

# பொதுக்கூட்டம்

அளவெட்டி, மே 2

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றுகூடலும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை நடராஜா அரங்கில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பாடசாலை அபி விருத்தி தொடர்பாக கலந்துரையாடப்படுவதுடன் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறும் என செயலாளர் ச.கிருஸ்ணசாமி தெரிவித்துள்ளார். (ந-36)

# இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 2

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் சைவ ஆலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 4 ஆம் 5ஆம் திகதிகளில் கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் கருத்தரங்கு சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப்பேரவையின் பெரும் தலைவர் கணேச பரமேஸ்வரதீக்ஷதரர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் சைவ ஆலயக் கிரியைகள் தொடர்பாக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், சைவ ஆலயம் பரிபாலனம் தொடர்பாக ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர், சைவ ஆலய நிர்மாணம் தொடர்பாக இந்து நாகரிக துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சமூக நோக்கில் சைவ ஆலயப் பணிகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், சைவ ஆலயங்களும் பக்தி இலக்கியங்களும் தொடர்பாக பேராசிரியர் நா.ஞானகுமரன், ஆலயப் பிணக்குகளை தவிர்ப்பது எப்படி? தொடர்பாக முகாமைத்துவ வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, வெளிநாடுகளில் சைவ ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகள் தொடர்பாக நோர்வே கணினி பொறியியலாளர் சி.சத்திகரன், சைவ ஆலயங்களில் பெண்கள் காட்டும் பக்தி நெறி தொடர்பாக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ந-13)

# முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல்கள்

## ஆங்கிலம் - தமிழில் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 2

இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்புக்களான தமிழில் இந்து சமய சிந்தனைகள், ஆங்கிலத்தில் Some Thoughts on Hinduism ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஆசியுரையையும், இந்து சிரோரத்தினம் மனித நேய மாமணி வி .கயிலாசபிள்ளை தலைமையுரையையும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் இந்து சமய சிந்தனைகள் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், ஜனாதிபதி சட்டத்தரணி கனக நாயகம் கனக- ஈஸ்வரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் கொழும்பு விவேகானந்த சபையின் உப தலைவி அருள் மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன், கம்பன் கழக நிறுவுநர் கம்பவாரிதி இ.ஜெயராஜ், இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை அதிகாரியும் ஸ்ரீ சத்திய சாய்பாபா அறக் கட்டளை அறங்காவலருமான ஏ.பி. நலகுன பாராட்டுரைகளையும், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (எ)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) ஏற்றப் படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணியில் இருந்து 11 மணி வரை ராணிவீதி சுகாதார கல்வி மையத்திலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரை பழம் வீதி, ச.ச நிலையத்திலும்,

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11மணிவரை சிவன் கோயிலடி சிவசக்தி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரை ஆலடி சந்தி பலாலி வீதியிலும்,

6 ஆம் திகதி திங்கள் காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை செட்டித்தெரு நல்லூர் முருகன் சன சமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணி யிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரை கோயில் வீதி, அகில இலங்கை இந்து மா மன்றத்துக்கு அருகிலும்விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற் றப் படவுள்ளன என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.(ந)



தெல்லிப்பழை பாலஞானோதய சபையின் 67 வது ஆண்டு விழா தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய சிவஸ்ரீ சிவகுமாரக்குருக்கள் இசையரங்கில் பிரம்மஸ்ரீ சு.வரத [illegible] தலைமையில் நடைபெற்றது. சபை மாணவர்களின் பண்ணிசை [illegible] இடம்பெற்றதைக் காணலாம். (ந-86)

# ஆனைக்கோட்டை பிரதான வீதியில் அநாதரவாகக் கிடந்த ஐம்பொன் சிலை

நவாலி,மே 2

ஆனைக்கோட்டை பிரதான வீதியில் அநாதரவாகக் கிடந்த பெறுமதி மிக்க ஐம்பொன் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு இரவு பண்டத்தரிப்பைச் சேர்ந்த விக்ரர் சங்கர் என்பவர் ஆனைக்கோட்டை சந்திக்கு சமீபமாகவுள்ள வீதியால் பயணித்துக் கொண்டிருந்த சமயம் வீதியில் அநாதரவாகக் கிடந்த ஐம்பொன் சிலையையும், சிலை செதுக்கும் சிறிய ஆயுத மொன்றையும் கண்டெடுத்து மானிப்பாய் பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

குறித்த சிலை தவறுதலாக விழுந்திருக்கலாமென்று தெரிவிப்பதுடன் இளைஞனின் நேர்மையையும், பொலிஸாரும் பிரதேச மக்களும் பாராட்டியுள்ளனர். (வ-100)

# ஆனைக்கோட்டை ஆதி விநாயகர் ஆலயம்



ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 15 திங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி கைலாச வாகனமும் மறுநாள் வேட்டைத் திருவிழாவும், எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (வ-100)

# கணித உபகரணம் தயாரித்தல் போட்டி

நெல்லியடி, மே 2

ஆசிரியர்களுக்கான இடைநிலை வகுப்புக் களுக்குப் பொருத்தமான கணித உபகரணங்கள் தயாரித்தல் போட்டி 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்கள் உரிய படிவங் களைப் பெற்று இரு பிரதிகளில் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-ரி)

# கரவெட்டி கோட்ட ஆங்கில தின எழுத்துப் போட்டிகள்

நெல்லியடி, மே 2

கரவெட்டிக்கோட்ட ஆங்கில தின எழுத்துப்போட்டிகள் வதிரி திரு இருதயக் கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தெரிவான மாணவர்கள் தாம் கற்கும் ஆங்கிலப் பாடப் புத்தகத்துடன் போட்டிக்கு சமுகமளிக்குமாறு வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்படாத கிணறு

அக்கராயன்,மே 2
துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் மீள்குடியமர்வின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு இதுவரை மக்கள் பயன்பாட்டுக்குரிய வகையில் வேலைகள் நிறைவடையாத நிலையில் காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்தினால் இந்தக் கிணற்றை அமைப்பதற்கான நிதி வழங்கப்பட்டது. ஆனால் வேலைகளைப் பொறுப்பேற்றவர்கள் இதன் வேலைகளை நிறைவு செய்யாத நிலையில் இந்தக் கிணறு காணப்படுகிறது.

கிணற்றின் அடிப் பகுதி சிமெந்து கொண்டு பூசப்படாமையினால் ஓரிரு கற்கள் வீழ்ந்து கிடப்பதாகவும் மழை வெள்ளம் கிணற்றுக்குள் கலப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலகம் கிணற்று வேலையைப் பொறுப்பெடுத்தவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என மக்கள் குரல் எழுப்பியுள்ளனர். (க-18)

# கிளிநொச்சி டிப்போ காணியில் இனி தனியார் பஸ் நிலையமும்

## இ.போ.ச. ஊழியர்கள் எதிர்ப்பு; நகர அபிவிருத்தியே என்கிறார் அரச அதிபர்

கிளிநொச்சி, மே 2
கிளிநொச்சியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காணியை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி டிப்போ ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இ.போ.ச. கிளிநொச்சி டிப்போவுக்கு உரிய 10 ஏக்கர் வரையான காணி துண்டாடப்பட்டு அதில் புனிதப் பகுதி, சிறுவர் பூங்கா என்பன அமைக்கப்பட்டு வரும் நிலையில், எஞ்சிய காணியில் அரைவாசியை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும், கிளிநொச்சி அரச அதிபரும் முயன்று வருவதாக இதன்போது அந்த ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் தகவல் தருகையில்;

நாங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணிபுரிந்து வருகின்றோம். வீதியில் பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைந்த பஸ்களே எங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது கிளிநொச்சி டிப்போவுக்கு 10 பஸ்கள் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று வரை பஸ்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இ.போ.ச. தலைமையக அனுமதியுடன் ஊழியர்கள் சேர்ந்து இப்போது இரண்டு பஸ்களை கொள்வனவு செய்து கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கான சேவையை நடத்தி வருகிறோம்.

இவ்வாறு நெருக்கடிகள் உள்ள எமது சாலைக்கு உரிய காணியையும் வேறு நபர்களுக்கு தாரை வார்க்க அரச உயர் அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் முயன்று வருகின்றனர். கிளிநொச்சி நகர்ப் பகுதியில் சிறிய காணித்துண்டு ஒன்றை மட்டும் டிப்போவுக்கு வழங்கிவிட்டு மீதிக் காணிக்கு பதிலாக முறிப்புப் பகுதியில் காணி வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

''கிளிநொச்சி நகரம் எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கட்டமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை மட்டும் அன்றி, காணி பயன்பாட்டுக் குழு, நகர அபிவிருத்திக் குழு உள்ளிட்டவர்களது கலந்தாலோசனைப்படியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### செயலகம் திருநகருக்கு

இதன்படி கிளிநொச்சி மாவட்டச் செயலகம் கூட திருநகருக்கு மாற்றப்படவுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அரச செயலகம் மட்டும் பொறுப்புடையதல்ல. கிளிநொச்சி நகர மையத்தில் பொதுச் சந்தை, தனியார், அரச பஸ் நிலையங்கள், பொழுது போக்கு பூங்கா உள்ளிட்ட கட்டமைப்புக்கள் அமைகின்றன. இதன் பொருட்டே குறித்த காணி பகிரப்படுகிறது. நகர அபிவிருத்தி நிலைகளின்படி நகருக்குள் டிப்போவை வைத்திருக்க முடியாது - என்றார்.

(ஜ-6)

## திட்டமிடப்படாது நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகள்

### விளையாட்டு வீரர்கள் விசனம்

மாங்குளம், மே 2
கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கண்டாவளைக் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் முறையாகத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்படாமலும், மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதனைக் கருத்தில் கொள்ளாமலும் நடைபெற்றதாக விளையாட்டு வீரர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் கண்டாவளைக் கோட்ட மட்டப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் தெரிவுப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிகளும் இதனை விட நீண்ட தூர ஓட்டங்களாகிய 800 மீற்றர், 1,500 மீற்றர், 5,000 மீற்றர் போட்டிகளும் ஒரே நாளில் நடத்தி முடிக்கப்பட்டன.

மேலும் அன்றைய தினமே மைதான நிகழ்ச்சிகளான குண்டு எறிதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல், முப்பாய்ச்சல், நீளம்பாய்தல், உயரம் பாய்தல் போன்ற நிகழ்ச்சிகளையும் நடத்தி முடித்துள்ளனர்.


இதன் பின்னரும் நின்றுவிடாது அஞ்சல் ஓட்டங்களையும் நடத்துவதற்குத் தீர்மானித்த போது வீரர்கள் அதிருப்தி தெரிவித்ததையடுத்து அந்த நிகழ்ச்சி கைவிடப்பட்டு பின்னர் பிற்போடப்பட்டது.

ஒரு நிகழ்ச்சியின் தெரிவுப் போட்டிக்கும் இறுதிப் போட்டிக்கும் இடையேயான இடைவெளி நேரம் சர்வதேச மெய்வன்மைச் சட்ட விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் தூர ஓட்டங்கள் பலவற்றில் ஈடுபடும் மாணவர்கள் ஒரே மாணவர்களாகவே இருக்கக் கூடும் என்பதனைக் கருத்தில் கொள்ளாமல் போட்டிகளை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் போட்டிகளை நடத்துவதாக விளையாட்டு ஆர்வலர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான போட்டிகளை நடத்துவது தொடர்பாக வடமாகாணக் கல்வித் திணைக்களம் கருத்தில் கொண்டு போட்டிகளை நடத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (க-422)

## பாலம் புனரமைப்பு



கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கணேசபுரம் செல்லும் வீதியில் உள்ள ரெயிலர் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. (ஜ-6)

## ஆபத்தான நிலையில் வீதிப் பாலம்

கிளிநொச்சி, மே 2
கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி சந்தையடி சிவசுந்தரம் வீதிப்பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. இந்தப் பாலத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் இதுவரை மூன்றுபேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதனை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இந்தப் பாலத்தின் பாதுகாப்புச் சுவர்கள் உடைந்து மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் குறித்த பாலத்தில் வாராந்தம் ஒரு விபத்து வீதம் இடம் பெற்று வருகின்றது.

1902 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குறித்த பாலம் இன்றுவரையும் எந்தப் புனரமைப்புப் பணிகளும் இன்றி காணப்படுகின்றது. எனவே குறித்த பாலத்தைப் புனரமைத்துத் தருமாறும் இந்தப் பகுதி மக்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## சட்டவிரோதமாக இரணைமடுக்குளத்தின் கீழ் ஆயிரம் ஏக்கர் காணியில் நெற்செய்கை

கிளிநொச்சி, மே 2
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் தீர்மானிக்கப்பட்ட அளவை விட ஆயிரம் ஏக்கர் காணிகளில் சட்டவிரோதமாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.



கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டுக்கான சிறுபோகச் செய்கைக்கு சுமார் 8,500 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. ஏ-9 வீதிக்கு மேற்குப் பக்கமாக புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் சிறுபோகச் செய்கையை கிழக்குப் பக்கமாக செய்வது என்றும் மேற்கு விவசாயிகளுக்கு கிழக்குப் பகுதியில் காணிகள் வழங்குவது எனவும், தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் மேற்குப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சுமார் 920 ஏக்கர் சிறுபோகச்செய்கைக்குரிய காணிகள் கிழக்குப் பக்கமாக வழங்கப்படவில்லை.

இதனை அடுத்து சுமார் 375 [illegible] இறுதி நேரத்தில் ஏ-9 வீதிக்கு மேற்குப்பக்கமாகவுள்ள 05 ஆம் வாய்க்கால் பகுதியில் காணிகள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஏ-9 வீதிக்கு கிழக்குப் பக்கத்தில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதியில் உள்ள காணிகள் அளவீடு செய்யப்பட்ட போது, சுமார் ஆயிரம் ஏக்கர் வரையான காணிகளில் மேலதிகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த முறைகேடு காரணமாகவே மேற்கு விவசாயிகள் பாதிக்கப்படவேண்டி ஏற்பட்டதுடன் மேலதிகமான மேற்குப் பகுதியிலேயே அவர்களுக்கு காணி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஜ-6)

## கமக்கார அமைப்பில் பல்வேறு முறைகேடுகள்

கிளிநொச்சி, மே 2
கிளிநொச்சி தருமபுரம் கிழக்கு கமக்கார அமைப்பின் நிர்வாகத்தில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகவும் இதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் கீழ் உள்ள தருமபுரம் கிழக்கில் செயற்பட்டு வரும் தருமபுரம் கிழக்கு கமக்கார அமைப்பினால் இந்த ஆண்டுக்கான சிறுபோக செய்கைக்குரிய பயிர்ச் செய்கை நிலங்களை வழங்குவதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதுடன், இந்தப் பகுதியில் உள்ள முப்பது வீதமான விவசாயிகள் பயிர்ச் செய்கை உரிமங்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதைப்போன்று நீர் விநியோகங்களிலும் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விவசாய அமைப்பினால் பயிர்ச் செய்கைக்குரிய விவசாயிகளின் பெயர் பட்டியல்கள் எவையும் இதுவரை காட்சிப்படுத்தப்படவில்லை என்றும் பயிர்செய்கை நிலங்களின் பரப்பளவு அறிவிக்கப்படவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ள இந்தப் பகுதி விவசாயிகள் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு குறித்த கமக்கார அமைப்பை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரிடத்தும் அன்பு காட்டு!

என் பிரியமான குழந்தைகளே!

நீங்கள் பிறரிடம் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். நண்பரிடமும், சக மாணவனிடமும், அண்டை வீட்டாரிடமும் அன்புடன் பழகுங்கள்.

பழகுவதில் பேதம் இருக்கக் கூடாது.

அனைவரும் ஒன்றே என்னும் உயர்ந்த எண்ணம் வேண்டும். யாரிடமும் விரோதத்தை வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

உங்கள் மனம் பரந்து விரிந்து காணப்பட வேண்டும்!

குறுகிய மனம் இருக்கக் கூடாது. அன்பு சுயநலமற்ற, பொதுநலமானது.

உலகில் சூரியன், சந்திரன், காற்று, நீர், வான் என அனைத்தும் பொதுவானது.

தென்றல் காற்று இவன் செல்வந்தன் என்றோ, இவன் ஏழை என்றோ பாரபட்சம் பார்த்து வீசுவதில்லை.

அது மாளிகைக்கும் சொந்தம். மண் குடிசைக்கும் சொந்தம்.

உங்கள் அறிவு, இவ்வாறு பொது நலத்துக்காகப் பயன்பட வேண்டும்.

உண்மை அன்பினால் மட்டுமே இத்தகைய பொதுநல எண்ணம் வாய்க்கும்.

கல்வி, உன் அறிவைத் தூண்டும். அந்த அறிவுடன் அன்பும் சேர்ந்தால், உன்னால் மக்கள் மிகுந்த பயனடைவர்.

மக்களுக்குச் சேவை செய்வது என்பது மகா புண்ணியம்.

சமீபத்தில் நான், டெல்லியில் டாக்டர் அப்துல் கலாம் அவர்களைச் சந்தித்தேன். என்னைக் கண்டதும் அவர் விரைந்து வந்து ஆரத் தழுவிக் கொண்டார்.

நான் என் அண்ணன் மகன் ராஜ்குமாரையும், தங்கை மகன் அபிஷேக்கையும் அழைத்துச் சென்றிருந்தேன். அவர்களுடன் குழந்தையோடு குழந்தையாய் உரையாடிக் கொண்டிருந்தார் டாக்டர் அப்துல்கலாம்.

அவரைப் பார்த்து, அந்தக் குழந்தைகள் கேட்டார்கள். நீங்கள் எந்தப் பள்ளியில் படித்தீர்கள்?'' என்று.

அதற்கு அவர், ''நான் சாதாரண பஞ்சாயத்துச் சபை பள்ளியில்தான் படித்தேன்'' என்றார்.

''பிறகு எப்படி இவ்வளவு ஞானம்? எவ்வாறு இவ்வளவு சாதனைகளைச் செய்தீர்கள்?'' என்று அவர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், எனக்கு சுப்பிரமணியம் என்றொரு ஆசிரியர் இருந்தார். அவர் எனக்குக் கொடுத்த கல்வி, அவர் கொடுத்த போதனை. அதனால் நான் விமானத்துறையில் பொறியியல் பிரிவில் படித்தேன். பின்பு அதிலிருந்து படிப்படியாக உயர்ந்தேன்'' என்றார்.

அவரது அறிவு, புத்திக் கூர்மை, ஆர்வம், முயற்சி, தன்னம்பிக்கை அனைத்தும் சேர்ந்து அவரை விஞ்ஞானி ஆக்கியுள்ளது.

ஒரு விஞ்ஞானி ஜனாதிபதி ஆகலாம் என்று நிரூபித்தவர் டாக்டர் அப்துல் கலாம்.

அவர் மக்கள் மீது கொண்ட அன்பால், நாட்டின் மீது வைத்த பற்றால், குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடும் குழந்தை உள்ளத்தால், நாட்டு மக்கள் போற்றும், போற்றிக் கொண்டிருக்கும் ஒரு மாமனிதராக உள்ளார்.

அவர் என் அண்ணன் மகனிடமும், தங்கை மகனிடமும் கூறினார். ''நாட்டுக்காகத் தியாகம் செய்ய வேண்டும். தியாகம் செய்ய அன்பு வேண்டும். அந்த அன்பைத் தான் உன் சித்தப்பாவாகிய, உன் மாமாவாகிய இந்த பரத்வாஜ் சுவாமிகள்.

மக்களுக்காகச் செய்து வருகிறார். அன்பும், ஆன்மிகமும் கலந்து மக்களுக்கு அரும்பணி ஆற்றுகிறார்.'' என்று அவர் கூறியபோது, அவர் என் மீது வைத்திருந்த அன்பும், பற்றும் எனக்குப் புரிந்தது.

குழந்தைகளே!

நீங்களும் டாக்டர் அப்துல்கலாம் போல விஞ்ஞானியாகலாம், ஜனாதிபதியாகலாம்.

மனதில் அன்பை மட்டும் நிறைத்துக் கொள்ளுங்கள்.

அன்பு இறைவடிவம். அது இறைவனிடம் இருந்து தோன்றுகிறது. மக்களை ஒருங்கிணைக்கிறது. மீண்டும் இறைவனிடமே சேர்க்கிறது.

அன்பினால் அகிலத்தையே வெல்லலாம்.

உன் உள்ளத்தில் அன்பு மலரும்போது இன்பம் வாசல் தேடி வரும். அன்பு மன்னிக்கும் பண்பை வளர்க்கும். உனக்கு மன்னிக்கும் குணம் வேண்டும்.

பிறர் உனக்குத் தீங்கு செய்து விட்டாலோ அல்லது தவறிழைத்து விட்டாலோ அவர்களைத் தண்டிப்பதை விட மன்னிப்பதே மேல்.

தண்டித்தால் கோபம் வளரும். விரோதம் மேலோங்கும். அது மீண்டும் உன்னைத் தாக்கும்.



மன்னித்துப் பார்.

அந்த மன்னிப்பே அவனுக்கு மாபெரும் தண்டனை. இந்த மன்னிப்பு என்னும் குணத்துக்கு அடிப்படை அன்பே.


அன்பு பேதமற்றதாக இருக்கட்டும்.

அன்பே உன்னை மனிதப் பண்புகளுடன் வாழ வைக்கும்

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**



# முஸ்லிம் மாணவருக்காக யாழில் முதலில் தோன்றிய ஒஸ்மானியா



**இக்பால்**

யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவை ஊறும் என்ற கூற்றுக்கிணங்க யாழூர் மக்கள் கல்வியிலும் மேலோங்கிக் காணப்பட்டனர். எட்டாம் வகுப்பு வரை கல்வி புகட்டும் பணியில் யாழ். மஸ்றஉத்தீன் பாடசாலை (புதுப்பள்ளி) முஹம்மதியா கலவன் பாடசாலை (அல்லாபிச்சை மாமா பள்ளி) வண். மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலை (மன்பஉல் உலூம் மத்ரஸா) ஆகியன நற்சேவை புரிந்தன.

இப்படியான கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக யாழ். வைத்தீஸ்வரா, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குச் சென்றனர். எனினும் அந்தக் காலத்தில் வசதி குறைந்தவர்கள் கனிஷ்ட பாடசாலைகளில் இருந்து மேற்படிப்பைத் தொடர முடியாமல் படிப்பை விட்டு விட்டு வேறு தொழில்களை நாடுபவர்களாக இருந்தனர். இது முஸ்லிம் சமுதாயத்துக்குக் கவலைக்குரிய விடயமாக இருந்தது.

இந்தக்கால கட்டத்தில் இலங்கையின் தேசிய வீரரும், சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபருமாகிய அல்ஹாஜ் Dr.T.B. ஜயா தலைமையிலான குழு 1938 ஆம் ஆண்டிலும், 1942 ஆம் ஆண்டிலும் பயணம் செய்தது. யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான ஒரு பாடசாலையை உருவாக்க வேண்டும் என்பதை இந்தக் குழுவினர் மக்கள் மத்தியில் வலியுறுத்தினர். யாழ். முஸ்லிம் மாணவர்கள் கல்வியில் தலை சிறந்து விளங்க வேண்டும் என்பதே ரி.பி.ஜயாவின் குறிக்கோளாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையொன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினார்.

எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்கிக் காணப்பட வேண்டும் என்றும் அதற்கான அடித்தளத்தை கால தாமதமின்றி ஆரம்பிக்கும்படியும் எடுத்துக் கூறிவிட்டுச் சென்றார்.

அதன்பின் யாழ். முஸ்லிம் மக்கள் விழித்துக் கொண்டனர். எப்படியாவது [illegible] முஸ்லிம் கல்விக் [illegible] நிறுவப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்கள். அந்தக் காலத்தின் வேகத்தில் பல்வேறு பிரதானிகளும் குழுக்கள் அமைத்து கருத்துக்கள் வெளியிட்டனர். மனுக்களை முன்வைத்தனர்.

ஊர் மக்களிடமும் வேறு நிறுவனங்களிலும் அரசியல் பிரமுகர்களிடமிருந்து பணம் திரட்ட முடிவு செய்தனர். அந்தக் காலத்தில் பெரிய தனவந்தரான வி.எம்.எம்.எஸ். அப்துல் காதர் ஹாஜியார் பணங்கொடுத்து உதவியது மட்டுமல்லாமல் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். அவருடன் யாழ். மாநகர முன்னாள் முதல்வர், வழக்கறிஞர் சுவாஸி, ஏ.எம்.சுல்தான், கிராம விதானையார் எஸ்.ஏ.றஸீன் (எனது தாயாரின் பெரியப்பா) ஆகியோரும் அயராது பாடுபட்டனர்.

> திரட்டப்பட்ட நிதியில் இருந்து யாழ்.நகரத்து முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்த 'ராப்ஸ்' வீதியில் காணித் துண்டு ஒன்று பெறப்பட்டது. (ஜின்னா மைதானத்துக்கு முன்பாக) 1959 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி ரி.பி.ஜயா அத்திபாரக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தார்.

அவர்களின் தலைமையில் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் பணம் திரட்டப்பட்டது. அப்போதைய யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கியூ.ஸி. அரச வாயிலாக ஒரு பெருந்தொகை பணத்தை ஒதுக்கிக் கொடுத்திருந்தார். இவ்வாறாகத் திரட்டப்பட்ட நிதியில் இருந்து யாழ்.நகரத்து முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்த 'ராப்ஸ்' வீதியில் காணித் துண்டு ஒன்று பெறப்பட்டது. (ஜின்னா மைதானத்துக்கு முன்பாக) 1959 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி ரி.பி.ஜயா அத்திபாரக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வி.எம்.எம்.அபூசாலி ஹாஜியார் முயற்சியால் 'ராப்ஸ்' வீதி என்று நாமம் பூண்டிருந்த தெரிய சாலை மாநகராட்சி மன்றத்தினரால் 'முஸ்லிம் கல்லூரி வீதி' என்ற புதிய பெயரைப் பெற்றது.

அத்திபாரக்கல் இட்டாலும் காலத்துக்குக் காலம் அரசியல் மாற்றங்களால் எவ்வளவோ தடங்கல்களும் இன்னல்களும் வந்தன.

அந்தச் சந்தர்ப்பத்தில் கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அப்போதைய பிரதமர் திருமதி எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் நெருங்கிய நண்பருமான முஸ்லிம் தலைவர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் ஆலோசனைகள் பெறப்பட்டன. அவரின் தகுந்த ஆலோசனைகளின் மூலம் திட்டமிட்டபடி கட்டட வேலைகள் தங்கு தடையின்றி ஆரம்பமாகின.

[வளரும்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
இல. 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: சதா வொன்ஸ் மாவை சந்தி, அல்வாய்: 0212263206. நெல்லியடி ... ஸ்டோர்ஸ் பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519. ஜோதி புக் சென்டர் மன்னார்: 0232222052. நீசாலை கஜானன் கண்டி வீதி, நீசாலை தெற்கு: 021 227 0399. மன்னார் சிவசாந்தி தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. கொடிகாமம் ... பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி வலைக்கீற்றி' ... : 0779598917. 'அன்புசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

## கோபக்கார திருவிழா

கோயிற் திருவிழா தொடங்கியிருந்தது. கனகர் ஒவ்வொரு நாளும் காலையிலே பக்திப் பழமாக மாறிவிடுவார். நெற்றியில் பெரிய வீபூதி பட்டை அடித்து, சரசரக்கும் பட்டு வேட்டியணிந்து, அதற்கு 'மட்ச்' பண்ணக்கூடிய கலரில் சால்வை உடுத்து கனகர் வீதியிலே நடந்து போகும் போது கையெடுத்து கும்பிடத்தோன்றும். போதாக் குறைக்கு சம்பந்தர் தேவாரத்தையோ அல்லது திருவாசகத்தையோ கேட்போர் மனம் கரையும் வகையில் பாடிக்கொண்டே செல்வார்.

காலையிலிருந்து மத்தியானம் கோயில் பூசை முடியும் வரை பச்சைத் தண்ணி சுட வாயில் வைக்கமாட்டார். கோயிலில் கொடுக்கும் பிரசாதத்தை உண்ட பின்னரே தனது மதிய உணவில் கையைப் பார். மற்றவர்களுடன் வீண் சோலி சுரட்டுக்கும் திருவிழாக் காலத்தில் போகமாட்டார். விரதம் என்றால் அப்படியொரு பயபக்தியான விரதம்.

அப்படிப்பட்ட கனகர் ஒரு நாள் திருவிழா வன்று காலையே 'மப்பும் மந்தாரமுமாக' வீதியில் தள்ளாடத் தொடங்கிவிட்டார். வாயில் திருவாசகத்துக்கு பதிலாக தெரு வாசகங்கள் துள்ளி பறக்க வந்து கொண்டிருந்தன. இடுப்பில் அரைகுறையாக கட்டப்பட்டிருந்த சாரம் ,நிற்பதா விழுவதா என்று பட்டிமன்றம் வைத்துக் கொண்டிருந்தது. பக்திப்பழமான கனகர் ஒரு நாள் திருவிழாவன்று ஏன் இப்படி மாறிப் போனார் என்று எல்லோருக்குமே ஒரே குழப்பம். ஆளைக் கிட்ட நெருங்க முடியாது. அந்தளவுக்கு சாராய நெடி தூக்கலாக இருந்தது. இருப்பினும் ஒருவர் மூக்கைப் பொத்திக்கொண்டு கனகரை நெருங்கிவிட்டார்.

"கனகு ! நல்லாத்தானே இருந்தனீ. கோயிலும் விரதமும் என்று பக்திமானாக இருந்த நீ இப்படி குடித்து ஊரெல்லாம் வாந்தி எடுக்கும் 'சத்திமானாக' ஏன் மாறினாய்?" என்று அவர் கேட்டார். அவரை முறைப்பாகப் பார்த்தார் கனகர்.

"எடேய்! இண்டைக்கு அவன் தியாகுவின்ர திருவிழா. அவனுக்கும் எனக்கும் ஆகாது. போனமாதம் சுட வாசிகசாலையில பழுதிக்கை புரண்டு அடிபட்டனாங்கள். அப்பிடியிருக்கேக்க என்னை கோபக்காரனின் திருவிழாவுக்கு நான் எப்பிடி விரதம் இருக்க முடியும். அதுதான் இண்டைக்கு மட்டும் விரதத்தை 'கான்சல்' பண்ணிப் போட்டன்." என்று பதில் சொல்லியிருக்கிறார்.

இப்படி குளத்தோடு கோபித்துக் கொண்டு தம் அழுக்கை கழுவாமல் விடுபவர்கள் நிறையப் பேர். தமக்கு எதிரானவர்களை பழிவாங்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு ஏதுமறியாதவர்களையும் வஞ்சிக்கும் பழக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தனக்கு நேரெதிர் கொள்கை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான அபிவிருத்தி ஒதுக்கீட்டில் அரச தரப்பு வேண்டுமென்றே பாராட்சம் காட்டுகிறது. அதே வேளை தனது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகளுக்கு நிதியை அள்ளி வழங்குகிறது. கூட்டமைப்பினருக்கு ஒரு பாடம் படிப்பித்தல், தமது ஆட்சியிலேயே அபிவிருத்தி கிடைக்கும் என்ற தோற்றத்தை உருவாக்குதல் என்பனவே கூட்டமைப்பு வசமுள்ள சபைகளை அபிவிருத்தியில் அரச தரப்பு புறக்கணிப்பதற்கான காரணிகள். ஆனால் இந்த வஞ்சிப்பில் மக்களுக்கான திட்டங்கள் அல்லவா வீணாகிப் போகிறது. எப்பக்கமும் சாராமல் செயற்படும் மனம் ஆட்சியாளர்களுக்கு எப்போது வரப்போகிறது?

# நேற்று தமிழர்கள்— இன்று முஸ்லிம்கள்
# நாளை பௌத்தரல்லாத சிங்களவர்கள்

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பொத்துவில் பிரதேசத்தில், புத்தர் சிலைகளை அமைப்பதற்கு இராணுவத்தினர் புத்த பிக்குகளுக்கு உதவுவதுடன், காலை மற்றும் இரவுகளில் பௌத்த பக்திப் பாடல்களை ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபெருக்குவதற்கும் உதவுகின்றனர்.

பல பத்தாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டு, 26 ஆண்டு காலமாக, இலங்கைத் தீவில் தொடரப்பட்ட போரானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் கூட, மீண்டும் இங்கு மோதல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தடவை இந்த மோதலுடன் இராணுவத்தினர் நேரடியாகத் தொடர்புபடவில்லை. இதற்குப் பதிலாக 'பொது பல சேனா' என்கின்ற சிங்கள தேசியவாத அமைப்பைச் சேர்ந்த புத்த பிக்குகள் தற்போதைய மோதல்களுக்குப் பொறுப்பாக உள்ளனர்.

இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் முக்கால்வாசிப் பேர் சிங்களவர்களாவர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தத் தடவை பௌத்த பிக்குகள் சிறுபான்மை முஸ்லிம் மக்களை இலக்கு வைத்துள்ளனர். முஸ்லிம் வணக்க இடங்கள் இலக்கு வைத்து தாக்கப்படுகின்றன.

'Halal' மாமிச இறைச்சிகளை விற்கும் விற்பனையாளர்கள் தாக்கப்படுகின்றனர். முஸ்லிம்களின் வீடுகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

"முஸ்லிம்கள் இந்த நாட்டில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து வாழ்கின்றனர். தற்போது தான் இவர்கள் ஹலால் உணவுகளை உண்ணவேண்டும் எனக் கூறுகிறார்கள். சனத்தொகை ரீதியாகப் பார்த்தால் முஸ்லிம்கள் ஐந்து சதவீதம் மட்டுமே. நாங்கள் தற்போது 'ஹலால்' உணவு முறையை அங்கீகரித்தால் அடுத்த தடவை முஸ்லீம்கள் சுன்னத்து செய்தல் - என்கின்ற அவர்களது பாரம்பரியத்தை இங்கு நடைமுறைப்படுத்த முயற்சிப்பார்கள். இதனால் இவ்வாறான விடயங்களை நாம் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இவை மரபுகளாகப் பின்பற்றப்படும். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இலங்கையில் எந்தவொன்றையும் கட்டுப்படுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.இதே போல் இஸ்லாமிய ஆடை அணியும் முறைமைகள் இலங்கையில் தடை செய்யப்பட வேண்டும். இலங்கையின் சட்டம் மற்றும் அரசியல் யாப்பு என்பன எப்போதும் சிங்கள பௌத்தர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவேண்டும். இவற்றுக்கப்பால் இலங்கையானது புத்தரிடமிருந்து சிங்களவர்களுக்கு கிடைக்கப்பெற்ற வெகுமதியாகும்" என பொது பல சேனாவைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு வலைப்பதிவில் தெரிவித்துள்ளார்.

circumcision என்கின்ற இஸ்லாமிய மரபை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும் என இலங்கையைச் சேர்ந்த பௌத்தன் ஒருவன் கூறுவதை கற்பனை செய்வதென்பது கடினமானதாகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பொத்துவில் பிரதேசத்தில், புத்தர் சிலைகளை அமைப்பதற்கு இராணுவத்தினர் புத்த பிக்குகளுக்கு உதவுவதுடன், காலை மற்றும் இரவுகளில் பௌத்த பாடல்களை ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபெருக்குவதற்கும் இவர்கள் உதவுகின்றனர். முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை பௌத்த சிங்களவர்கள் கையகப்படுத்துகின்றனர். இதற்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்குகின்றனர். இலங்கைத் தீவானது புத்தரிடமிருந்து தமக்கு கிடைக்கப்பெற்ற வெகுமதி என பௌத்த கடும்போக்காளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இத்தீவானது இலங்கையில் வாழும் தமிழ் மற்றும் சிங்களவர்களுக்கு உரியது என சான்றுகள் நிரூபிக்கின்றன. இலங்கை 1948 இல் சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பௌத்த அடிப்படைவாதம் என்பது பிரதான காரணமாகியது. சுதந்திரக் கட்சியின் தலைவரும் நாட்டின் முன்னாள் பிரதமருமான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1959இல் பௌத்த பிக்கு ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். இவர் தமிழ் மக்களுக்கு சலுகைகளை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டார்.

இதற்குப் பிறகு, புத்த பிக்குகளின் தலையீடுகள் அரசியலில் ஏற்பட தமிழர் எதிர்ப்பு மற்றும் புறக்கணிப்புக்களும் அதிகரித்தன. இவ்வாறான அரசியல் அடக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதப் போராட்டமே ஒரு வழி என தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர். வங்காளி முஸ்லிம்கள் தமது சகோதர உறவான மேற்கு பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேசத்தை உருவாக்கியது போல் தமிழ் மக்களால் தமக்கென தனிநாட்டை ஏன் உருவாக்க முடியாது?

தமிழ் மக்கள் கோரிய சுயாட்சியை வழங்காததால் சிங்களவர்கள் உள்நாட்டு யுத்தம் ஒன்றை எதிர் கொள்ள வேண்டியேற்பட்டது. 1976 இல், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்ட போது, 'ஈழம்' என்கின்ற தமிழ் தனிநாடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் வங்கிகளில் கொள்ளையடித்தார்கள். இவர்கள் இலங்கை பொலிஸ் நிலையங்கள் மற்றும் அரச அதிகாரிகளை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு ஆரம்பமான புலிகளின் தாக்குதல்கள் பெரியளவில் வளர்ச்சி பெற்றது. சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை புரிந்ததுடன், பல்வேறு மீறல்களையும் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

தற்போதைய அரசு தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை தமிழ் மக்களின் சிவில் உரிமையைப் பறிப்பதற்காக பயன்படுத்துகிறது. இலங்கை இராணுவத்தினர் தற்போதும் தமிழ் மக்கள் வாழிடங்களில் அதிகம் நிறுத்தப்பட்டுள்ளனர். ஊடக சுதந்திரம் என்பது தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகிறது. ஜனவரியில், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை மஹிந்த ராஜபக்ஷ பதவி நீக்கினார். முன்னாள் பிரதம நீதியரசர் ஊழலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தியே பதவிநீக்கப்பட்டார். ஆனால் இவர் இலங்கை அரசின் விருப்பிற்கிணங்க சட்டம் மாற்றம் கொண்டுவரவில்லை என்பதே இவர் பதவி நீக்கப்பட்டதற்கான உண்மையான காரணமாகும். மக்களின் சிவில் உரிமைகள் மீறப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தவே ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ராஜபக்ஷ தற்போது நாட்டின் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, நிதி மற்றும் துறைமுகம், நெடுஞ்சாலைகள் போன்ற துறை சார் அமைச்சராகவும் பதவி வகிக்கிறார். இவரது சகோதரர் பசில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சராவார். பிறிதொரு சகோதரரான சமல், நாடாளுமன்ற சபாநாயகராவார். இவரது பெறாமகன் சசீந்திர, ஊவா மாகாணத்தின் முதலமைச்சராவார். இவரது மைத்துனனான ஜாலிய விக்ரமசூரிய, அமெரிக்காவுக்கான தூதுவராக கடமையாற்றுகிறார். பிறிதொரு மைத்துனரான உதயங்க வீரதுங்க ரஸ்யாவுக்கான தூதுவராவார். இலங்கை ஜனாதிபதியின் 25 வயது மகன் நாமல், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினராவார். இங்கு சீன உதவியுடன் பிரதான துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சீன பாதுகாப்பு முக்கிய அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து இடங்களை சுற்றிப் பார்வையிட்டுள்ளதுடன், விரைவில் கரையோரப் பகுதியில் மேற்கொள்ளவுள்ள சீனத் திட்டங்களுக்கான இடங்களை கண்காணித்தனர்.



இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக தற்போது லண்டனில் வசித்து வரும் 80 வயதான தமிழ் நாவலாசிரியரான ஏ.சிவானந்தன், தமிழ் மக்கள் மட்டுமன்றி இலங்கையில் வாழும் சிங்கள மக்களும் அச்சத்துடன் வாழும் நிலை உருவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

புத்த பிக்குகள் விரைவில் சுயாதீனமாக செயற்படுவார்கள். பௌத்தத்தை பின்பற்றாத சிங்களவர்களை புத்த பிக்குகள் புறக்கணிப்பார்கள். இதற்கு ராஜபக்ஷவும், அவரது குடும்பத்தவர்கள், நண்பர்கள் எல்லோரும் உதவுவார்கள். இதனால் நாட்டில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாதபடி எழுச்சியுறலாம்" என நாவலாசிரியர் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

(நன்றி-புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...!

இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களா? பெண்களா? என்ற கேள்வியில் நானும் ஒரு பெண் என்ற வகையில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் என்றுதான் கூறுவேன். நவநாகரிகம் என்ற போர்வைக்குள் மூழ்கிக் கிடக்கும் பெண்களுக்கு எந்தவித வெட்கமும் இல்லை. அந்தக் காலத்தில் பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் குணங்கள் இருந்தன. இந்தக் குணங்களை தற்காலத்தில் யாராவது ஒரு பெண்ணிடம் காண முடிந்தால் அது அரிதான ஒரு விடயமாகும்.

வீதியில் ஒரு தாயும் மகளும் நடந்து சென்றார்களாயின் யார் தாய்? யார் மகள்? என்று இனங்காண்பதே மிகக் கஷ்டமாக இருக்கும். அவர்களைப் பார்த்தால் சகோதரிகள் என்றுதான் ஏனையோர்கள் கூறுவார்கள். அந்த அளவுக்கு மகளின் நவநாகரிக மாற்றத்துக்கு ஏற்ப தாயும் அந்த நவநாகரிகத்துக்கு மாறும் நிலை காணப்படுகிறது. இன்றைய நவீனகாலப் பெண்கள் அதிகளவு நவநாகரிக ஆடைகளுக்கும், ஆபரணங்களுக்கும், கிறீம் வகைகளுக்கும், நகப்பூச்சு வகைகளுக்கும் இன்னும் ஏராளமாக நவநாகரிக பொருள்களுக்கும் செலவு செய்கின்றனர்.

இந்த நவநாகரிகத்துக்குள் மூழ்குபவர்கள் போதைவஸ்துக்கு அடிமைப்பட்டவர்கள் போல அதிலிருந்து மீள முடியாமல் சிரமப்படுகின்றனர். இவர்கள் அணியும் ஆடைகளுக்கு ஏற்ற நிறங்களிலே நகப்பூச்சு, பூல்பான்ற், உதட்டுப் பூச்சுக்கள், சங்கிலிகள், காப்புகள் என்று அணிந்து தங்களது இயற்கை அழகை செயற்கையால் அசிங்கமாக்கிக் கொள்கின்றனர்.

இந்தப் பூமியில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் அழகானவர்கள்தான். அழகு என்பது ஒருவருடைய மனதைப் பார்த்து வரவேண்டும். முகத்தைப் பார்த்து வருவதில்லை.

ஒரு பெண்ணின் இயற்கை அழகுக்கும் செயற்கை அழகுக்கும் உள்ள வித்தியாசத்தை இலகுவாக இனங்காண முடியும். எனவே நவீன உலகில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் தான் என்பதே எனது நிலைப்பாடு.

வி.விஜயசாந்தி,
புலோலி



# கடல் சிங்கத்தின் நடனம்



இசைக்கு இசைவாக்கம் செய்யும் கலையை கலிபோர்னியா விஞ்ஞானிகள் வெற்றிகரமாக கடல்சிங்கம் ஒன்றுக்கு கற்பித்துக் கொடுத்துள்ளனர்.


மனிதர்கள் மற்றும் பறவைகளைத் தவிர விலங்குகள் இசைக்கு தமது பிரதிபலிப்பைக் காண்பிப்பது இதுவே முதல் தடவை என்று கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீற்றர் குக் தெரிவித்தார்.

அவர் 'ரொனான்' என்று அழைக்கப்படும் கடல் பெண் சிங்கம் ஒன்றுக்கு இசைக்கு ஏற்ப நடனம் ஆடும் கலையைக் கற்பித்துக் கொடுத்துள்ளார்.

இசையைக் கேட்டவுடன் நீர்த்தடாகம் ஒன்றிலிருந்த இந்தக் கடல் சிங்கம் தரைக்கு வந்து தனது தலையை அசைக்கும் வீடியோ காட்சிகள் பதிவாகியுள்ளன. இந்தக் காட்சிகள் பலரை வெகுவாகக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'ரொனான் வெற்றிகரமாக இசைக்கு தனது அசைவை காட்டும்' என்று அதனது பயிற்றுவிப்பாளரான குக் தெரிவித்துள்ளார்.

முதலில் ரொனானுக்கு பாடலுக்கு ஏற்றவாறு தலை அசைப்பதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பின்பு அது அதனைப் பரிமாற்றம் செய்துகொண்டது. இதற்கு முன்பு ரொனான் இசை என்ற ஒன்றைக் கேட்டதில்லை.



ரொனான் கடந்த 2008 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. நெடுஞ்சாலை ஒன்றில் கைவிடப்பட்டுக் கிடந்த நிலையில் அது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் விடப்பட்டது.

எனது முதல் அறிமுகத்திலே ரொனான் பிரகாசமான கடல் சிங்கம் என்பதை நான் அறிந்துகொண்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ..........................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்


நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



## சிந்தனைத்துளி



* இரு இதயங்கள் இணைந்தால் வைக்கோல் தொட்டியும் அரண்மனை ஆகும்.
* சிறிய உதவிகளை மறக்காதே; ஆனால் சிறிய தவறுகளை மறந்து விடு.
* பல திசைகளில் ஓடும் மனதை வைராக்கியத்தால் ஒருமுகப்படுத்த முடியும்.
* நன்றி விசுவாசத்துடன் நடந்து கொண்டால் ஆண்டவன் கருணை நிச்சயம் கிட்டும்.
* பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கு நன்மையைத் தேடிக் கொள்கின்றான்.
* பிறருக்கு உழையுங்கள்; பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.

-துவாரகா,கைதடி

## என்னவளின் அழகு

பன்னிரெண்டு
மாதங்களும்
போதாது
என்னவளின்
எழில்
எழுதுவதற்கு
இன்னுமொரு
மாதம்
வேண்டும்
என்னவளின்
பொலிவை
பதிவதற்கு



சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர் வெற்றியை கொண்டாட தயாராகின்றது இலங்கை

கொழும்பு,மே2

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து, இலங்கைப் படைகள் போரில் ஈட்டிய வெற்றியை நினைவு கொள்ளும் வெற்றி விழாக் கொண்டாட்டங்களுக்கு இலங்கை தயாராகி வருகிறது.

இலங்கைப் படையினரால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட மே மாதம் 19 ஆம் திகதி ஆண்டுதோறும் இலங்கையில் வெற்றி நாள் அணிவகுப்பு மற்றும் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

> நான்காவது ஆண்டாக எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தப்படவுள்ள இந்த வெற்றிநாள் கொண்டாட்டத்துக்கு இப்போதே கொழும்பு தயாராகத் தொடங்கியுள்ளது.

நான்காவது ஆண்டாக எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தப்படவுள்ள இந்த வெற்றிநாள் கொண்டாட்டத்துக்கு இப்போதே கொழும்பு தயாராகத் தொடங்கியுள்ளது.

வெற்றிநாள் அணிவகுப்பின் ஒத்திகை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தொடக்கம் காலி முகத்திடலில் இடம்பெற்று வருகின்றது.

இந்த வெற்றி நாள் கொண்டாட்டங்கள் தமிழர்களின் மனதைப் புண்படுத்துவதாகவும், இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இத்தகைய கொண்டாட்டங்களை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இலங்கை அரசு அதனை ஒரு தேசிய நாளாக பிரகடனம் செய்து கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

# 'உதயன்' மீதான தாக்குதலுக்கு கண்டனம்; கல்முனை மாநகர சபையில் தீர்மானம்

## பிரேரணையை முன்மொழிந்தார் முதல்வர் சிராஸ் மீராசாஹிப்



அம்பாறை,மே2

'உதயன்' மீது இனம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கல்முனை மாநகர சபை வன்மையாக கண்டித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கல்முனை மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாஹிப் தலைமையில் நடைபெற்ற மாநகர சபையின் மாதாந் தக் கூட்டத்தில் 'உதயன்' மீதான தாக்குதலைக் கண்டித்து, கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் தரப்பான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரித்ததுடன் தீர்மானம் நிறைவேறியது.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய முதல்வர் முஹம்மட்சிராஸ் மீராசாஹிப் கண்டனத் தீர்மானத்துக்கான பிரேரணையை சபையில் முன்மொழிந்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சி.எம். முபீத் பிரேரணையை வழிமொழிந்தார்.

முதல்வர் சபையில் கண்டனப் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றிய போது கூறியதாவது:-

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வடக்கில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் குரலாகத் திகழ்ந்து வருகின்றது.

கடந்த பல வருடங்களாக அடிக்கடி 'இனந்தெரியாதோர்' எனக் கூறப்படுபவர்களின் மிலேச்சத்தனத் தாக்குதல்களுக்குள்ளாகி வரும் 'உதயன்' கடந்த இரு வாரங்களுக்கு முன் மீண்டும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது.

'உதயன் மீதான இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டித்து நமது சபை ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.- என்றார்.

பிரேரணையை வழிமொழிந்து பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சி.எம். முபீத் உரையாற்றுகையில்.

உதயன் மீதான தாக்குதல் இதுதான் முதற்தடவையல்ல. கடந்த பல வருட காலமாக அடிக்கடி இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்கள் உதயன் மீது நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஜனநாயக நாட்டில் தொடர்ச்சியாக இத்தகைய தாக்குதல்கள் உதயன் மீது நடத்தப்பட்டும், இதுவரை அதன் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படவோ, இனம் காட்டப்படவோ இல்லை.

அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் உறுப்பினராக நான் இந்த மாநகரசபையிலிருப்பினும், உதயன் மீதான தொடர்த் தாக்குதல்கள் தொடர்பில் அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவிக்கின்றேன். -என்றார்.

மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினருமான ஏ.அமிர்தலிங்கம் உரையாற்றுகையில்:-

நாம் நடந்து செல்லும் போது காலில் கல்லடிபட்டுவிட்டால், உடனே 'அம்மா' என்று வாய் அலறுகின்றது. கல்லடிப்பட்ட கால் அலறவில்லை.

இதற்கு ஒப்பவே 'உதயன்' மீதான தாக்குதலுக்கு உணர்வுபூர்வமாக இந்தக் கண்டனப்பிரரேணையை நமது முதல்வர் முன்மொழிந்துள்ளார்.


ஒரு சமுதாயத்தின் மீது வக்கிரம் காட்டப்படும்போது மற்றச் சமுதாயம் பார்த்துக் கொண்டிருக்காது என்பது நம் சிறுபான்மை சமூகங்களின் நிலைப்பாடாகும்- என்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஐ.எல்.முஹம்மட் பிர்தௌஸ் உரையாற்றுகையில்:-

உலகம் எதிர்பார்க்கும் நல்லிணக்கம் வருவதற்கு, உதயன் தாக்குதல் தொடர்பில் உருப்படியான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.-என்றார். (ச-ரி-30)

# புதுவகையான மலேரியா ஒட்டுண்ணி கண்டுபிடிப்பு

## பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை



கொழும்பு,மே2

மலேரியா நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிக் கிருமிகளில், அந்நோயைக் கட்டுப்படுத்த உதவும் முக்கிய மருந்தான அர்டெமிசினின் என்ற மருந்துக்குக் கட்டுப்படாத மூன்று பிரிவுகளை தாங்கள் அடையாளம் கண்டுள்ளனர் என்று விஞ்ஞானிகள் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மூன்று பிரிவு ஒட்டுண்ணியுமே கம்போடியாவின் மேற்குப் பகுதியில் ஒரே இடத்தில் இருந்துதான் உற்பத்தி ஆகின்றன.

இந்தக் கண்டுபிடிப்பு பொதுமருத்துவத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒட்டுண்ணிகளின் மரபணுத் தொகுதியை தாங்கள் வரைபடமாக விளங்கிக்கொண்டுள்ளபடியால், புதிய பிரிவு ஒட்டுண்ணிகளைக் காணும்போது அவற்றை அடையாளம் காண்பது எளிதாகிவிட்டது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஏனைய மருந்துகளுக்கு கட்டுப்படாத மலேரியாவைத் தோற்றுவிக்கும் ஒட்டுண்ணிப் பிரிவுகளும் மேற்குக் கம்போடியாவில் இருந்துதான் உற்பத்தியாகின.

குறிப்பிட்ட அந்த இடத்தில் ஏற்படுகின்ற சில விசேட மாற்றங்கள்தான் ஒட்டுண்ணிகளில் மரபணு மாற்றங்கள் ஏற்பட்டு புதுப் பிரிவுகள் உருவாகக் காரணம் என்று விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச)

# இலங்கை பௌத்தருக்கு மட்டும் சொந்தமான நாடு இல்லை

## சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு,மே2

இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

பட்டமுல்ல கந்த விகாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சில அரசியல்வாதிகள் இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது என்று பிரசாரம் செய்து வருகின்றனர். எனினும், அதில் எவ்வித உண்மையுமில்லை.

சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாழ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன,மத,குல பேதங்களைக் களைந்து மக்கள் அனைவரும் சமாதானத்துடன் வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ச)

# மத்தல விமான நிலையத்துக்காக உயிரைக் கொடுக்கும் குரங்குகள்



கொழும்பு,மே2

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார இணைப்பில் சிக்கி, நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரை மாய்க்கின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென் மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனாவின் உதவியுடன் கட்டியுள்ளார்.

இந்த விமான நிலைய கட்டுமானத்தால் பறவைகள், மயில்கள், முதலைகள், யானைகள், போன்றவற்றின் வாழ்விடங்கள் இழக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இந்த விமான நிலையத்தினால் குரங்குகள் நாளாந்தம் உயிரிழந்து வருகின்றன. இதுவரை பல நூற்றுக்கணக்கான குரங்குகள் உயிரை மாய்த்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டையில் இருந்து மத்தல விமான நிலையத்துக்காக 33 ஆயிரம் வாட்ஸ் திறனுள்ள உயர் அழுத்த மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செலவுகளைக் குறைப்பதற்காக, இந்த இணைப்பு சரணாலயம் வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சரணாலயப் பகுதியில் 13 கிலோமீற்றர் வரை அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சார இணைப்புகளில் பாயும் உயர் அழுத்த மின்சாரத்தை அறியாமல், குரங்குகள் அவற்றின் மீது ஏறித் தாவுகின்றன. இதனால் நாளொன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையிலான குரங்குகள் உயிரிழந்து வருகின்றன.

ஒவ்வொரு முறையும் குரங்கு மின்சாரத்தினால் தாக்கப்படும் போதும், விமான நிலையத்துக்கான மின்சாரம் சில நிமிடங்களுக்குத் தடைப்படுகிறது. அதனால் விமான நிலையத்தில் உள்ள உயர்திறன் கொண்ட ரேடர் கருவி பாதிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மத்தல விமான நிலைய அதிகாரிகள், இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

விமான நிலையத்துக்கான மின் இணைப்பை, சரணாலயத்துக்கு வெளியே வேறு மார்க்கத்தில் அமைக்க வேண்டும். அல்லது சரணாலயத்தில் உள்ள அத்தனை குரங்குகளையும் சுட்டுக் கொன்று விட வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**இடபர்:** எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து செல்லும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பொறாமை பிரச்சினை வந்து நீங்கும்.

**மிதுனர்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கடகர்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தந்தைவழிச் சொத்திலிருந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள்.

**சிங்கர்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினை களுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

**கன்னி:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளால் நன்மையுண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இளவயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**நாளை**

சித்திரை-20 வியாழக்கிழமை 03.05.2013
திதி: அட்டமி மு.ப. 08.23 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 04.55 வரை
சுபநேரம்: 05.56- 07.26 வரை
இராகுகாலம்: 10.26- 11.56 வரை

**துலார்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**விருச்சிகர்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரர்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில அலைச்சல் அதிகரிக்கும். யலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் அடையலாம். அசைவ உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் ஏற்படும்.

**கும்பர்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 1 | 2 | | 4 | | |
| 6 | | | | 3 | | | 2 | |
| 4 | | | | 6 | | 9 | | |
| 1 | | 4 | 9 | | | 2 | 5 | |
| 7 | | | 2 | | 6 | | | 4 |
| | 6 | 2 | | | 3 | 1 | | 9 |
| | | 3 | | 9 | | | | 5 |
| | 7 | | | 5 | | | | 1 |
| | | 1 | | 7. | 4 | 6 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 6 | 9 | 5 | 7 | 3 | 4 |
| 6 | 3 | 5 | 4 | 7 | 1 | 8 | 2 | 9 |
| 7 | 4 | 9 | 3 | 2 | 8 | 1 | 6 | 5 |
| 3 | 9 | 6 | 5 | 1 | 7 | 2 | 4 | 8 |
| 4 | 2 | 1 | 8 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 5 | 8 | 7 | 2 | 4 | 9 | 3 | 1 | 6 |
| 9 | 7 | 4 | 1 | 3 | 6 | 5 | 8 | 2 |
| 1 | 5 | 2 | 7 | 8 | 4 | 6 | 9 | 3 |
| 8 | 6 | 3 | 9 | 5 | 2 | 4 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒழுங்கமைவை ஏற்படுத்த வேண்டும். இங்கு பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




இரணைப்பாலை

புனித பற்றிமா அன்னை ஆலய

திருவிழாவும், விளையாட்டு, கலை நிகழ்வுகளும்

காலம் : 13.05.2013
நேரம் : காலை 7.00 மணி
திருநாள் திருப்பலி

அன்றைய தினம் எமது அன்னையின் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக St. அன்ரனிஸ் விளையாட்டு கழகத்தால் நடத்தப்படும் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் மாலை கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நிகழ்வுகள்:
1. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் 60 Km
நேரம் : திருப்பலி முடிவின் பின்னர்
2. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு
நேரம் : மாலை 3.00 மணி (நிபந்தனைக்குட்பட்டது)
3. மரதன் ஓட்டம் ஆண்கள் 10 Km
நேரம் : திருப்பலி முடிவின் பின்னர்
4. கலை நிகழ்வு (இரட்ணம் இசைக்குழுவின் மதுர கானம்)
நேரம் : மாலை 7.00 மணி

தொடர்புகளுக்கு: 0773454583 தலைவர்
0776320302 செயலாளர்
0779688422 பொருளாளர்

(C/8458) (10,6,7)



விண்ணக வாழ்வில் ஏழு வருடங்கள்

இவ்வுலகில்
23.11.1969



"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு"
- 2 கொரி 5:1

விண்ணுலகில்
02.05.2006

பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)
(முன்னாள் சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்)

"என்னை அறிந்தவர்களே என் மீது இரக்கமாயிருங்கள்
உங்கள் இடைவிடாத வேண்டுதலே எனக்கு ஆறுதலும் ஆனந்தமுமாகும்"

ஜெபம்!
அன்பிலும் பண்பிலும் பாசத்திலும், பிறரன்பிலும் முன்மாதிரியாக இப்பொழுது உமது சந்நிதியில் நித்திய வாழ்வினை சுவீகரித்துக் கொண்ட எமது அன்பு தந்தையின்/ கணவரின் ஆன்மாவை யாதொரு பழுதுமின்றி ஏற்றுக்கொண்டமைக்காக இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம்.
எமது சுரேஷுடைய ஆன்மாவை அமைதியும் ஒளியும் நிறைந்த இடத்திலே வரவேற்று உம் புனிதருடைய தோழமையில் சேர்த்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம் - ஆமென்

எமது சுரேஷின் ஆன்ம இளைப்பாற்றுக்காக
இன்று காலை 6.45 மணிக்கு கொழும்பு - 15, பாம் வீதியில் அமைந்துள்ள
புனித கார்மேல் மாதா சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றென்றும் உங்கள் நினைவுகளுடனேயே எமது வாழ்நாள் உள்ளவரை
உங்கள் நினைவுடனேயே வாழும்
சுவேன் (மனைவி - Suven),
அல்றின், சேஷா (பிள்ளைகள் - Alrin, Saesha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றம் வந்த பாம்பு



கொழும்பு,மே 2
சுமார் ஆறு அடி நீளமான நாக பாம்பொன்று நீதிமன்றத்துக்குள் புகுந்தமையினால் நீதிமன்ற அறைக்குள் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாத்தறை மாவட்ட நீதிமன்ற அறைக்குள்ளேயே இந்த நாகபாம்பு நேற்று முன்தினம் நண்பகல் புகுந்துள்ளது.

அதனால் அங்கிருந்த பணியாளர்கள் பெரும் அச்சமடைந்தனர்.

பாம்பு புகுந்த சமயத்தில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்திலும் வழக்கு விசாரணைகள் நிறைவடைந்திருந்தன.

இதனையடுத்து, நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸாரும் அங்கிருந்த பிரதேசவாசிகளும் இணைந்து அந்தப் பாம்பை விரட்டிவிட்டனர். (ச)

## ஹெரோயின் வைத்திருந்த பெண் வெலிக்கடையில் மாட்டினார்

கொழும்பு,மே 2
வெலிக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள அருணோதய மாவத்தையில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம் இருந்து 2 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது என்று வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்ட பெண் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து தாம் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# இலங்கைக்கான நிதி உதவியை திடீரென நிறுத்தியது அமெரிக்கா

> பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயற்திறனின்மை மற்றும் அலட்சியம் காரணமாகவே அமெரிக்கா நிதியை மீளப்பெற்றுள்ளது.

கொழும்பு,மே 2
இலங்கையின் நீதித்துறையை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட 450 மில்லியன் ரூபா நன்கொடையை அமெரிக்கா திரும்பப் பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயற்திறனின்மை மற்றும் அலட்சியம் காரணமாகவே அமெரிக்கா இந்த நிதியை மீளப்பெற்றுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் நீதித்துறையை தரமுயர்த்தும் நோக்கில், சட்டரீதியான தாமதங்களை தவிர்க்கும் வகையில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்காகவே இந்த நன்கொடையை அமெரிக்கா வழங்கியது.

இலங்கை அரச அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத நிலையிலேயே அமெரிக்கா இந்த நிதியுதவியை திரும்பப் பெற்றுள்ளது.

நன்கொடை திரும்பப் பெறப்பட்டுள்ளதை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

இந்த நிதியுதவியின் மூலம் இலங்கையின் நீதித்துறையை தரமுயர்த்துவம் வகையில், நீதிமன்றச் செயற்பாடுகளை கணினி மயப்படுத்துவது, நீதிபதிகளுக்கு தீர்ப்புகளை எழுதுவது குறித்த பயிற்சிகளை வழங்கல், நீதிபதிகளுக்கு காணொலிக் கலந்துரையாடல் வசதிகளை ஏற்படுத்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கமைய நீதிபதிகள் கொழும்புக்குச் செல்வதை தவிர்ப்பதற்காக காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மூன்று நிலையங்களை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மரபணு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு வசதிகளை அறிமுகப்படுத்தும் வகையில் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தை தரமுயர்த்தவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கையின் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் வசதிக் குறைபாடுகளால் பெருமளவு குற்றவியல் வழக்குகளின் விசாரணை தாமதமாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தில் இலங்கை நீதிபதிகளுக்கு அமெரிக்காவில் நீதித்துறை அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதும் உள்ளடங்கியுள்ளது.

அமெரிக்க நிதியுதவி திரும்பப் பெறப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை நீதியமைச்சின் செயலர் கமலினி டி சில்வா, அந்த நிதியுதவி மீள முறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நீதித்துறை செயற்பாடுகளுக்காக ஒதுங்கப்பட்ட அந்த நிதி, நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத பயிற்சி மற்றும் ஏனைய திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நீதி அமைச்சுக்கான நிதியுதவியாக இருந்தாலும், அதனைப் பெறுவது குறித்த பேச்சுக்களை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சே மேற்கொண்டது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைக்கான நன்கொடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள அமெரிக்கத் தூதரகம், அது மீள முறைப்படுத்தப்படுவதற்கு எந்தச் சாத்தியமும் இல்லை என்று கூறியுள்ளது.


எதிர்காலத்தில் இத்தகைய நன்கொடைகள் குறித்து அனுமானிக்க முடியாது என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஊழலை எதிர்த்துப் போராட்டம்....




புல்மோட்டை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கூட்டுத்தாபனத்தில் நடைபெறும் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

## சூரிய மின்சாரத்தைப் பயன்படுத்தி மீன்களை உலர்த்த நவீன சாதனம்



கொழும்பு,மே 2
சூரிய மின்சாரத்தைப் பயன்படுத்தி மீன்களை உலர்த்தி உயர் ரக கருவாடு தயாரிக்கும் கூண்டு வடிவிலான புதிய சாதனம் ஒன்று புத்தளம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சினால் நாத்தண்டியில் உள்ள மூதுகட்டுவ என்ற மீனவக கிராமத்தில இந்த சூரிய சகதி மின்கூடு ஒரு லட்சதது 72 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மண் மற்றும் தூசி கலக்காத தூய்மையான நிலையில நாளென்றுக்கு 120 கிலோ மீன் வகைகளை உலர்த்தக்கூடிய தாக இந்தக் கூடு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பராமரிப்புச் செலவுகள் மிகவும் குறைவான தோடு கடற்கரைப் பிரதேசங்களில் மிக இலகுவாக இந்தக் கூடுகளை நிறுவ முடியும்.

இதே போன்ற கூடுகள் மீன்வளம் அதிகளவில உள்ள நீர்கொழும்பு, புததளம, இலங்கையின வடக்கு, கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களிலும் அமைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

## நாட்டில் அநீதியே அதிகம்

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு,மே 2
நாட்டில் அநீதி மேலோங்கியுள்ளது. அதற்கு எதிரான போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விகாரமடைந்த அரசியல் கலாசாரமே இன்று நாட்டில் காணப்படுகிறது.

மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட அரசியல்வாதிகள் கள்ளச் சாராய விற்பனை,சூதாடுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தம்மையும் தமது குடும்பத்தாரையும் போசிக்கும் நோக்கில் அரசியல் நடத்துகின்றனர்.

தற்போதைய அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்காவிட்டால் நாடு அழிவுகளை சந்திக்க நேரிடும்.

மக்களுக்கு தேர்தல் மீதான நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது.-என்றார். (ச)

## வணிகப் புள்ளிவிவரவியல் பாடத்தை நீக்க மாட்டோம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே 2
ஜி.சீ.ஈ உயர்தரத்தில் வணிகப் புள்ளிவிவரவியல் பாடததை நீககுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என வெளியான செய்தி தவறானது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

உயர் கல்விப் பிரிவில் புதிய தொழிநுட்பங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

அதற்கமைய பொறியியல் தொழிநுட்பம், விஞ்ஞான தொழிநுட்பம் ஆகிய புதிய பிரிவுகள அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று கலவி அமைச்சர் தெரிவித்தார்.

உயர் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இளைஞர் விவகார அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு , தேசிய கலவி நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து இந்தப் புதிய பிரிவுகளை அறிமுகம் செய்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



# ஊழியர் சேமலாப நிதியம் அங்கத்துவப் பணத்தை செலுத்தத் தவறிய முதலாளிகள் மீது நடவடிக்கை

### ரூ. 4,603 மில்லியனை அறவிடுவதில் நிதியம் தீவிரம்



ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அங்கத்துவப் பணத்தை செலுத்தாத 13,134 முதலாளிகளிடமிருந்து 4603 மில்லியன் ரூபாவை அறவிட ஊழியர் சேமலாப நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பணம் செலுத்தாத முதலாளிகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகமும் அதனோடு தொடர்பான 52 நிறுவனங்களும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன என்று ஊழியர்சேமலாப நிதிய ஆணையாளர் டி.பி. கே. ஆர். வீரக்கோன் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பணம் செலுத்தாமல் சிவப்பு அறிவித்தல்களையும் [illegible] 1387 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

தொழிலாளர் உரிமையான ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வழங்கி அதன் அனுகூலங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் தொடர்ந்து [illegible] படுத்தப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் நன்னீர் நிலைகள் புனரமைப்பு

## பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது

யாழ்ப்பாணம், மே 2

வலி. கிழக்கு பிரதேசத்தில் உள்ள நன்னீர் குளங்கள் மற்றும் நீர் நிலைகளை ஆழமாக்கி புனரமைப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று அதன் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோடை காலத்தை பயன்படுத்தி இந்த நன்னீர் தேக்கங்களை ஆழமாக்கி புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நன்னீர் நிலைகளை ஆழமாக்குவதன் மூலம் மாரி காலத்தில் மழை நீரை தேக்கி வைக்க முடியும். இதன் மூலம் நன்னீருக்கான தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும். பிரதேசத்தில் பாவனையற்றுக் காணப்படும் கால்நடைகளுக்கான நன்னீர் கேணிகளை புனரமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அநேகமாக கேணிகள் பாவனையின்றி பற்றைகள் மூடி படர்ந்து காணப்படுகின்றன.

சில கேணிகளுக்குள் மக்கள் கழிவுப் பொருள்களை கொட்டி வருவதால் அவை மாசடைந்து காணப்படுகின்றன.

மிகவும் பழமை வாய்ந்த இந்த புராதன சின்னங்களை புதுப்பித்து அதனை ஆழமாக்கிப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கேணிகளைப் புனரமைப்பதன் மூலம் வறட்சி காலங்களில் நீரை சேமித்து வேறு தேவைக்கு பயன்படுத்தவும் முடியும்.

இந்தச் சுகாதாரச் சீர்கேட்டால் கேணிகள் மாசடைவதால் ஏற்படும் நுளம்பு குடம்பிகள் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக கோப்பாய் பூதன் மடத்துக்கு முன்பாகவுள்ள கேணி ஒன்று தூர்ந்து பாழடைந்து காணப்படுகின்றது.

இந்தக் கேணியில் அதிக நுளம்புக் குடம்பிகள் பெருகியும் காணப்படுகின்றன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# காணாமற்போன பெண்கள் மீட்பு

வலி. வடக்கு, மே 2

கடந்த வாரம் காணாமல் போன 26 வயதான பெண் ஒருவரும் 16 வயதான சிறுமியொருவரும் மீட்கப்பட்டனர்.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் காணாமற்போயிருந்தார் என சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

காணாமற்போனார் எனக் கூறப்பட்ட 26 வயதான குறித்த பெண் கொழும்பில் உள்ள உறவினருடைய வீட்டில் இருக்கிறார் என உறவினர்கள் சுன்னாகம் பொலிஸில் தெரிவித்துள்ளதுடன் முறைப்பாட்டையும் மீளப் பெற்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் குறிப்பிட்ட இளம் பெண் காணாமற் போயிருந்தார் என முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறிப்பிட்ட பெண் கொழும்பில் உள்ள உறவினருடைய வீட்டுக்கு ஒருவரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மல்லாகம் கோட்டைக்காட்டுப் பகுதியில் பெற்றோர்களுடன் முரண்பட்டுக் கொண்டு வீட்டில் இருந்து காணாமற்போனார் என முறையிடப்பட்ட 16 வயதுச் சிறுமி, சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட சிறுமி வீட்டில் இருந்து காணாமற்போனார் என பெற்றோர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட சிறுமி நீர்கொழும்புப் பகுதியில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டு இருக்கையில் நீர்கொழும்புப் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டார்.

அவர்கள் சுன்னாகம் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலை அடுத்து பெற்றோர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையம் சென்று தமது மகளை அழைத்து வந்தனர். என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

### கட்டாக்காலிகளால் அழியும் சிறுதானியம்

தென்மராட்சி, மே 2

சாவகச்சேரி பெருங்குளம் கிராம் புவில் பகுதிகளில் பயிரிடப்பட்ட சணல், பயறு உள்ளிட்ட சிறுதானியப் பயிர்கள் இரவு வேளைகளில் வரும் கட்டாக்காலி மாடுகளால் தினமும் அழிக்கப்பட்டு வருகின்றது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

பல நாள்கள் இரவு வேளையில் பயிர்களை அழித்து வந்த மாடுகளை நேற்றுமுன்தினம் இரவு தங்கியிருந்த விவசாயிகள் துரத்திப் பிடித்தனர். குறியிடப்பட்ட மாடுகள் இவ்வாறு பிடிக்கப்பட்டன. கமக்கார அமைப்பு ஒன்றின் தலைவரின் மாடுகள் இவை எனத் தெரியவந்தாக விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

மாடுகளைக் கமக்கார அமைப்பின் தலைவரின் வீட்டுக்குச் கொண்டு சென்று ஒப்படைத்த விவசாயிகள் இரவு வேளையில் கட்டி வளர்க்குமாறு கூறிவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# திருமணம் செய்வதாகக் கூறி 12 லட்சம் ரூபா பணம் மோசடி

வலி. வடக்கு, மே 2

திருமணம் செய்வதாகக் கூறி பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றினார் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

மகளை திருமணம் செய்வதாகக் கூறி யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவரிடம் 12 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று மோசடி செய்தார் எனக் கூறப்படும் நபருக்கு எதிராகவே முறையிடப்பட்டுள்ளது. சந்தேக நபர் நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்தவர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ம-86)

### சபா சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், மே 2

வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் 62 ஆவது சபா சங்கக் கூட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் 3 நாள்களுக்கு இடம்பெற்றது.

பேராயர் டானியல் தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னி, மலையகம், கிழக்கு மாகாணம், தென்பகுதி ஆகிய இடங்களில் இருந்து பிரதிநிதிகள் வருகைதந்திருந்தனர். (ம)

# சுகாதாரப் பிரிவினரை தாக்கிய தண்ணீச் சாமி

## அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 2

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றிக் கொண்டிருந்த குழுவினரை மது போதையில் வந்த நபர் ஒருவர் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி புத்தூர் ஊரப்பாளைப் பகுதியில் இடம் பெற்றது.

அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கடந்த 2 வருடகாலமாக வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

அன்றைய தினமும் வழமை போன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றிக் கொண்டிருந்தனர்.

இதன்போது மது போதையில் வந்த நபர் சம்பவ இடத்தில் இருந்தவர்களைத் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் பொது சுகாதாரப் பரிசோதகரையும், பிரதேச சபை உறுப்பினரையும் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும், சம்பவத்துடன் தொடர்புடைய நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

குறித்த நபர் கிராமத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் மதுபோதையில் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் பொது மக்கள் அதனை வேடிக்கை பார்த்து விலகிச் செல்கின்றனர். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

### ஆடு கடத்தியவர்கள் பொலிஸிடம் அகப்பட்டனர்

வலி. வடக்கு, மே 2

ஓட்டோவில் ஆட்டை திருடி வந்தவர்கள் பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனை நிலையத்தில் இடம்பெற்றது.

சோதனை நிலையத்தை ஓட்டோ சென்றடைந்த போது பொலிஸார் ஓட்டோவை



மறித்துள்ளனர். ஓட்டோ நிற்காது சென்றுள்ளது.

இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் ஓட்டோவைத் துரத்திச் சென்று பிடித்தனர்.

ஓட்டோவில் பயணித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஆடும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.


பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

# பனை வெல்ல உற்பத்தி நிலையம் பண்டத்தரிப்பில்

யாழ்ப்பாணம், மே 2

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனை வெல்ல உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் இந்த வெல்ல உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.



தினமும் அங்கத்தவர்களிடம் இருந்து ஆயிரத்து 200 போத்தல் பதநீர் பெறப்பட்டு இந்த உற்பத்தி நிலையத்தில் வெல்ல உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பனை வெல்ல தொழிற்சாலையை ஆரம்பித்ததன் மூலம் இந்தச் சங்கத்தில் 260 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் என்று அருந்தவநாதன் கூறினார்.

இதேசமயம் இந்த பனம் வெல்ல தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லம் பிறமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# நிவாரணத்தை உரிய நடைமுறையில் விநியோகிக்காமை குறித்து விசனம்

யாழ்ப்பாணம்,மே 2

யாழ். குடாநாட்டில் உலக உணவு திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில உரிய நடைமுறையில் விநியோகிக்காதது குறித்து சங்கங்கள் மீது மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் விசனம் தெரிவித்துள்ளார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் உலக உணவு திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் நிவாரணம் குறித்து ஆராயப்பட்டது.

நடைமுறைக்கு அமைவாக 24 பொருள்கள் விநியோகிக்கப்பட வேண்டும். சில சங்கங்கள் இந்த நடைமுறையை பின்பற்றவில்லை.

தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு விநியோகித்தமை குறித்து ஆணையாளர் சம்பந்தப்பட்ட சங்கங்கள் மீது விசனம் தெரிவித்துள்ளார்.

''நிவாரணத்துக்கான பொருள்கள் விநியோகத்தின் போது சங்கங்கள் உரிய நடைமுறையை பின்பற்ற வேண்டும். இவ்வாறு பின்பற்றாத சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் உதவி ஆணையாளர் முன்னரே தெரிவித்திருந்தார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை. பிரதேச வங்கியாளருக்கான கிரிக்கெட் தொடர்

# இலங்கை வங்கியை வீழ்த்தியது செலான் வங்கி



முல்லைத்தீவு, மே 2
2013ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு பிரதேச வங்கியாளர்களுக்கான ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் 8 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இடம்பெற்றது. இந்த இறுதியாட்டத்தில் இலங்கை வங்கி கிரிக்கெட் அணியும், செலான் வங்கி கிரிக்கெட் அணியும் மோதிக் கொண்டன.
விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை வங்கி அணியை 12 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிபெற்றது செலான் வங்கி அணி.
தொடரில் 89 ஓட்டங்களையும், 3 இலக்குகளையும் கைப்பற்றிய செலான் வங்கி அணியைச் சேர்ந்த மா.ஹரிப்பிரவீன் தொடர் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.(ற)

19 வயது உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

# கனகராயன்குளம் ம.வி. பெண்கள்அணி சம்பியன்

மாங்குளம், மே 2
வவுனியா மாவட்ட 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி.
கடந்த திங்கட் கிழமை சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியும் நெளுக்குளம் மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் சமபலம் கொண்டவையாகக் காணப்பட்டதால் ஆட்டம் மிக விறுவிறுப்பான நடைபெற்றது.
ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதைச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய கனகராயன்குளம் ம.வி. அணி தனது முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.
மீண்டும் 12ஆவது நிமிடத்தில் கனகராயன்குளம் ம.வி. அணிக்குக் கிடைத்த தண்டனை உதைச் சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டது.
ஆட்டத்தின் முதல்பாதி கனகராயன்குளம் ம.வி. அணி 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றிருந்த நிலையில் முடிவடைந்தது.
இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியது முதல் பந்து கனகராயன் குளம் ம.வி. அணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. நெளுக்குளம் அணி கோல் பெறவேண்டும் என்ற முனைப்போடு விளையாடிய போதும் கனகராயன்குளம் ம.வி. தடுப்பாட்டத்திலேயே முனைப்புக் காட்டியது.
நெளுக்குளம் அணிக்கு கிடைத்த சில வாய்ப்புகளும் இழக்கப்பட இறுதியில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி 1:0 என்ற ரீதியில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.
மூன்றாம் இடத்தை தரணிக்குளம் கணேஸ்வரா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.
மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன என்று வவுனியா வடக்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.மங்களகுமார் தெரிவித்தார். (ற-422)



யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் உடுவில் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் உடுவில் பிரதேச கழகங்களுக்கு இடையே சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட ஸ்கந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா வெற்றிக் கிண்ணம் வழங்கினார். (ற-86)

# வடமராட்சி வலய தடகள முடிவுகள்

கரணவாய்,மே 2
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

**15 வயது ஆண்கள்**

**100 மீற்றர்**
வி.மதுஷாந்- சிதம்பரக் கல்லூரி, பி.பிரசன்னா- இருதயக் கல்லூரி, என்.ரசாந்தன்- ஹாட்லிக் கல்லூரி.

**110 மீற்றர்சட்டைவேலி**
ஏ.டிலக்ஷன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வி.ஜெனார்த்தனன்-ஹாட்லிக் கல்லூரி, ஆர்.கிருஷாத்- ஹாட்லிக் கல்லூரி, கே.இலக்கணன்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,

**தட்டு எறிதல்**
ஏ.நிரோசன்-ஹாட்லிக் கல்லூரி, ஜி.குருபரன்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பி.நிலக் ஷன்-கட்டைவேலி யார்கரு வித்தியாலயம்

**ஈட்டி எறிதல்**
ஆர்.ரொனாட்டோ-கலட்டி றோ.க.வித்தியாலயம், என்.ஜசிகரன்-தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், எஸ்.சுகந்தன் - விக்னேஸ்வராக் கல்லூரி

**உயரம் பாய்தல்**
எஸ்.அகீசன்-கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை, ஆர்.ரவிவர்மன் - இமையாணன் அ.த.க. பாடசாலை, ஆர்.கிருஷன்-ஹாட்லிக் கல்லூரி

**நீளம் பாய்தல்**
ஜே.மோகன்ராஜ்-தொண்டமனாறு மகாவித்தியாலயம், என்.மகிபன் தொண்டமனாறு ம.வி,எ.டிக்ஷன்-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**பெண்கள்**

**குண்டு போடுதல்**
எம்.சுகிந்தா - வட இந்து மகளிர் கல்லூரி, எஸ்.சிந்துஜா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, எ.அகல்யா -வடமராட்சி மத்திய கல்லூரி

**நீளம் பாய்தல்**
பி.ஜதுகினி - வட இந்து மகளிர் கல்லூரி, எஸ்.சுரேகா, வட இந்து மகளிர் கல்லூரி, பி.விதுசனா - வட இந்து மகளிர் கல்லூரி

**உயரம் பாய்தல்**
எஸ்.ஜெனித்ரா -வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ஏ.தர்சிகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, லக்ஷனா - உடுப் பிட்டி மகளிர் கல்லூரி, வி.டிலானி - அம்பன் அ.த.க. பாடசாலை

**தட்டு எறிதல்**
ரி.சுயாளினி - அம்பன் அ.த.க. பாடசாலை, எம்.கிருத்திகா -உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ்.மாதுளா - மருதங்கேணி இ.த.க.

**100 மீற்றர்**
ரி.மிதுனா-இமையாணன் அ.த.க.பாடசாலை, எம்.மதுரா - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, என்.தனுசிகா- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**17 வயது ஆண்**

**110 மீற்றர் சட்டவேலி**
வி.திருபரன்-ஹாட்லிக் கல்லூரி, ஆர்.கவித்மன் -நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், எ.சுகன்ரஜ்-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.

**குண்டு போடுதல்**
என்.கவிராஜ்-ஹாட்லிக் கல்லூரி,ஃபிரணவன்- பொலிகண்டி இ.த.க. பாடசாலை, வை.சுவேந்திரா-ஹாட்லிக் கல்லூரி,

**800 மீற்றர்**
பி.பிறேம்நாத்-திருஇருதயக் கல்லூரி, வி.கோகுலன்- ஹாட்லிக் கல்லூரி, வி.நிலக்ஷன்ராஜ் - மணற்காடு றோக.த.க பாடசாலை

**உயரம் பாய்தல்**
எஸ்.விதுஜன்-ஹாட்லிக் கல்லூரி, ஜே.ஜெயரங்கன்-நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், எஸ்.கணநாதரத்தினம்-கொற்றாவத்தை அ.த.க பாடசாலை

**முப்பாய்ச்சல்**
ஜே.டிலக்ஷன்-ஹாட்லிக் கல்லூரி, ஜே.சிவகிருஜன்- கரணவாய் மகாவித்தியாலயம், எஸ்.கணநாதரத்தினம்- கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை

**ஈட்டி எறிதல்**
ஈசன் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ரி.நிவேதனா-ஹாட் லிக் கல்லூரி,ஜே.விக்னேஸ்வரன்- புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை

**தட்டெறிதல்**
என்.கவிராஜ்-ஹாட்லிக் கல்லூரி, வை.அபிராஜன்- ஹாட்லிக் கல்லூரி, பி.சுலக்ஷன்-கட்டைவேலி யார்க்கரு வித்தியாலயம்

**பெண்கள்**

**முப்பாய்ச்சல்**
எஸ்.மலர்வாணி-வட இந்து மகளிர் கல்லூரி ,ஆர்.மரிய சிந்துஜா-மணற்காடு றோ.க. த.க, கே.கிஷோபா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**குண்டு போடுதல்**
எஸ்.சுகந்தா-கம்பர்மலை வித்தியாலயம், கே.சாகிந்தியா-மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை, ஜே.சுதாசினி- தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

**100 மீற்றர்**
ரி.ஜெசிந்தா-மருதங்கேணி இந்து வித்தியாலயம்- எம்.ஜெயணி. செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, ஈ.மேரி. விநோதா- மணற்காடு றோ.க. வித்தியாலயம்

**நீளம் பாய்தல்**
எஸ்.மலர்வாணி-வடஇந்து மகளிர் கல்லூரி, எஸ்.ஆரணி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜே.சகித்யா-மெதடிஸ்த பெண்கள் கல்லூரி. (ற-400-8-ரி)

(தொடரும்)

## பாடசாலை அணிகளிடையே உதைபந்தாட்ட போட்டிகள்



யாழ்ப்பாணம், மே 2
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17,19 வயதுப் பிரிவு ஆண்கள் மற்றும் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 6ஆம் 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன .
15 வயதுப்பிரிவு ஆண்கள், 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திலும், 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதை பந்தாட்டப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட தொடர்

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது யாழ்ப்பாண மாவட்ட லீக் அணி

யாழ்ப்பாணம், மே 2
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் பதிவுசெய்யப்பட்ட லீக் அணிகளின் 40 வயதுக்குமேற்பட்டோர் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மன்னார் மாவட்ட லீக் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யாழ். மாவட்ட லீக் அணி.
கடந்த வியாழக்கிழமை மன்னார்தாழ்வுபாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முதல்பாதி 1:0 என்ற ரீதியில் யாழ்.மாவட்ட அணி முன்னிலை பெற்றிருந்த நிலையில் முடிவடைந்தது.
இரண்டாம் பாதிஆட்டம் ஆரம்பமானதும் மன்னார் மாவட்ட லீக் அணி கோல் ஒன்றை பெற வேண்டும் என்ற முனைப்போடு கடும் போராட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் மன்னார் அணியின் முயற்சிகளை உடைத்து யாழ்.மாவட்ட அணி தனது இரண்டாவது கோலைப் பெற்றது. ஆட்டநேர முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை வீழ்த்தியது யாழ். அணி.
இந்த வெற்றியின் மூலம் தொடரின் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யாழ்.மாவட்ட லீக் அணி. (ற-23)

## யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், மே 2
யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்துக்கான புதிய நிர்வாக சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.
சங்கத்தின் புதிய தலைவராக முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.ஜே.எவ். ரூ.சிங்கம்தெரிவுசெய்யப்பட்டார்.
உபதலைவராக திருமதி ஜெயானந்தகுமாரி சரவணபவஜயரும், செயலாளராக செல்வி எஸ்.சுரேந்தினியும், உபசெயலாளராக செல்வி எஸ்.மனோன்மணியும், பொருளாளராக திருமதி மிதுலா ரமணனும், உப [illegible] தெரிவு செய்யப்பட்டனர். (ற-400)

## சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிவுகள்

மாங்குளம், மே 2
வடிவேலு இலங்கேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருநாவலர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த சதுரங்கப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 9 வயது, 11 வயது, 13 வயது, [illegible] வயது, 17 வயது பிரிவுகளின் போட்டி முடிவுகளின் தொடர்ச்சி வருமாறு:
திறந்த போட்டி ஆண்கள்
1 ஆம் இடம் - இ.மாதுஷன் (ஹாட்லிக்கல்லூரி),2 ஆம் இடம் - வி.கஜன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), 3 ஆம் இடம்- சு.சுமன் (உடுப்பிட்டி அ.மி.க)
திறந்த போட்டி பெண்கள்
1 ஆம் இடம் - வே.நிதர்சனா (மெதடிஸ்த பெ.உ.த. பாடசாலை), 2 ஆம் இடம்- செ.பிரிமிளா (இமையாணன் மேற்கு நாவலடி). (ற-422)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 2
யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கான பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டி எதிர் வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று அறி விக்கப் பட்டுள்ளது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கோஹ்லியிடம் நடந்து கொண்டது ரொம்ப அதிகம்தான்" – கெய்ல்

ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் அணித் தலைவர் கோஹ்லியை கடுமையாக மும்பை ரசிகர்கள் வசை பாடியதை கிறிஸ் கெய்ல் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

கோஹ்லி தன் நாட்டிற்காக விளையாடுகிறார் . அந்த நாட்டு கிரிக்கெட்டிற்காக சிறப்பாக விளையாடி வருகிறார். அவர் மீது இத்தகைய ஒரு நடத்தை தேவையற்றது என்றே நான் நினைக்கிறேன். தங்கள் அணியை ஆதரிப்பது நல்லதுதான். ஆனாலும் தங்கள் நாட்டு வீரர்களையும் ஆதரிக்க வேண்டும். கால்பந்து லீக் ஆட்டங்களில் இது போன்று நடப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இது கிரிக்கெட் ஆட்டத்திற்குள் நுழைவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

இப்படிக் கூறினாலும் கோஹ்லிக்கு நடந்தது போன்று திரும்பத் திரும்ப நடக்கத்தான் போகிறது ஆகவே நாம் மன உறுதியுடன் செயல்படுவது அவசியம்'' என்று அவர் தெரிவித்தார்.

(ற)



# பழைய பந்திலும் சிறப்பாக வீசுவேன் – புவனேஸ்குமார்

புதிய பந்தில் எனக்கு இலக்குகள் விழுகின்றன என்பதால் பழைய பந்தில் நான் திறமையாக வீசமாட்டேன் என்று அர்த்தமல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய இளம் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்குமார்.

சமீபத்தில் புவனேஷ்குமார் குறித்து இந்திய வேகப் பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா குறிப்பிடுகையில், அவர் புதிய பந்தில் நன்றாக வீசுகிறார் என்று கூறியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் விதமாக தற்போது புவனேஷ் சூசகமாக அவருக்கு தெரிவித்துள்ளார்.

''நான் புதிய பந்தில் இலக்குகள் எடுக்கிறேன் என்பது உண்மைதான், ஆனால் அதற்காக பந்து பழுதான பின்னர் வீச முடியாது என்பதெல்லாம் இல்லை. ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் கூட நான் பழைய பந்தில் பல பந்துப் பரிமாற்றங்கள் வீசினேன்.

ஆகவே பழைய பந்திலும் திறமையாக என்னால் வீச முடியும் என்று நான் தன்னம்பிக்கையுடன் கூறுவேன்'' என்று தெரிவித்துள்ளார் அவர்.



அண்மையில் கெய்ல் எதிரணி பந்துவீச்சை விளாசித் தள்ளியபோது புவனேஷ்குமார் 4 பந்துப்பரிமாற்றங்களில் 23 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து தப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பாகிஸ்தான் சம்பியன்ஸ் கிண்ண அணி அறிவிப்பு

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டிருந்த 30 பேர் கொண்ட குழுவில் இடம்பெற்றிருந்த உமர் குல் காயம் காரணமாக வெளியேற்றப்பட, எஞ்சியிருந்த 29 வீரர்களிலிருந்து இந்த 15 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் சிரேஷ்ட சகலதுறை வீரரான ஷகிட் அப்ரிடி, இளைய அதிரடி வீரர் உமர் அக்மல் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களாக ஓட்டங்களைப் பெறவும், இலக்குகளைச் சரிக்கவும் தடுமாறி வந்த ஷகிட் அப்ரிடி, தென்னா பிரிக்காவிற்குப் பயணம் செய்த பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்த நிலையில், அந்த வாய்ப்பு அவருக்கு இறுதி வாய்ப்பாகக் கருதப்பட்டது. எனினும் அந்தத் தொடரிலும் அவர் சிறப்பாகச் செயற்படாத நிலையில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள அணி

மொஹமட் ஹபீஸ், இம்ரான் பர்ஹத், நசீர் ஜம்ஷெத், கம்ரன் அக்மல், மிஸ்பா உல் ஹக், சொய்ப் மலிக், அசத் சபீக், சயீட் அஜ்மல், ஜூனைட் கான், மொஹமட் இர்பான், அசாத் அலி, வகாப் றியாஸ், உமர்அமீன், அப்துர் ரெஹ்மான், இஷான் அடில்.

(ற)


## நியூ நெல்சன் லேணர்ஸ் நடத்தும்

NEW NELSON LEARNERS

வட மாகாண பொது சேவைக்கு சாரதி சேவையின் III ஆம் வகுப்பு பதவிக்கான ஆள்சேர்ப்பு செய்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

- இடம்- கலைத்தூது கலையகம், 285, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- காலம்- 03.05.2013
- நேரம்- பி.ப 1.00 முதல் 5.00 மணி வரை
- போக்குவரத்து விதிமுறைகள்- 20 வருட காலமாக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக கடமையாற்றிய திரு. வ. பத்மநாதன் மற்றும்
- பொதுஅறிவு: வளவாளர்-திரு.த.தவசேகர்

பதிவு செய்யும் இடங்கள்

நியூ நெல்சன் லேணர்ஸ்

| | |
|---|---|
| கண்டி வீதி, யாழ்ப்பாணம்- | 021 222 4527 |
| பருத்தித்துறை வீதி, நெல்லியடி- | 021 492 3115 |
| வல்வெட்டித்துறை- | 021 492 3733 |
| சுன்னாகம்- | 021 492 3732 |
| சாவகச்சேரி- | 021 492 3144 |

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் (36960)(6.11)

## IELTS A1 B1 B2

Quick Preparation Available Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education, No 75, Temple Road, Jaffna, IELTS Centre

## THE SCIENCE CORNER CLOCK TOWER LANE - JAFFNA

2015 BIOLOGY

இழையங்கள்

ஆரம்பம்: 03.05.2013 வெள்ளி

நேரம் : 3 - 4.30 P.m.

சு. பொன்திவாகரன்

## யாழ் நகரில் வர்த்தக நிலையம்

குறைந்த முதலீட்டுடன், குறைந்த வட்டியுடன், வங்கிக்கடன் வசதியுடன், இடவசதிகள் செய்து தரப்படும்.

0777517019

0777428525 (36898) (10.6.7)

SMT Developers (Pvt) Ltd.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

No.1 veta

Spoken English

Veta Fluency Diploma

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
- மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
- நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.

வார இறுதிநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 4/5/2013 காலை 9.30 மணி

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

City & Guilds A1, A2, B1, B2 (ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

IELTS (Duration: 50 hrs with 5 mock exams)

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்.

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113 கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V வீதி. Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | Jet Tel.:021-224 1970 |

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட தரமான ஊர்க் கோழிக் குஞ்சு விற்பனைக்குண்டு.

தொடர்பு: சூசியப்பர் வீதி, பத்தமேனி, அச்சுவேலி. 077 742 5888

VMJ பௌசி, விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு. 077 337 5821 (36857) (6.11)

## THE SCIENCE POINT

கன்னாதிட்டி வீதி, யாழ் நகர்.

A/L 2014

ORGANIC

ஆரம்பம் - 03.05.2013 வெள்ளி 5.00p.m

Mon.Fri - 5-6.00

INORGANIC

Sat.Sun - 11.30-12.30

By-அன்பு

## மணல் மண் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் உகந்த உப்புத் தன்மையற்ற மணல் மண் விற்பனைக்குண்டு. உங்கள் இடத்திற்கே கொண்டுவந்து தருகிறோம்.

தொடர்பு: ஜீவா 071 368 4639 (36949) (45.6)

## SPOKEN ENGLISH

யாருக்காக?

- அரச, தனியார் அலுவலர்கள்
- பல்கலை, உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர், யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12 வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி - -04.05.2013

பிரிவு : 01 காலை 8.00 - 10.00 பிரிவு : 02 மு.ப 10.00 - 12.00

பிரிவு : 03 பி.ப 1.00 - 03.00 பிரிவு : 04 மாலை 3.00 - 5.00

வார நாள் பயிற்சி நெறி : 06.05.2013 (திங்கள், புதன்)

பிரிவு : 01 9.00 - 11.00 பிரிவு : 02 3.00 - 5.00

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ் தொ.பே : 077 621 4567

## விஃனா கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2015

கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம் : 04.05.2013 காலை 8 மணி

தன்னிகரில்லா தனித்துவமான ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.

## மணல் மண் வேண்டுமா?

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

$4\frac{1}{2}$ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம் 072 63 78 546

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 6 ஆம் நாள் - லிங்கோற்பவக்காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அனைத்துலக நாடுகள் எங்கள் உள்விவகாரங்களில் தலையிடாதிருக்க...

இலங்கை ஏனைய நாடுகளின் இறையாண்மையில் தலையிடுவதில்லை. அதே போன்று பிறநாடுகள் எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட வேண்டியதில்லை. பிற நாடுகளின் தலையீடுகள் எதிர் விளைவுகளையே உற்பவிக்கும்.

சமூக நல்லிணக்கத்தை உண்டாக்குவது என்ற போர்வையில், எமது நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தேவையற்ற விதத்தில் தலையிடுகின்றன.

எந்த வெளிநாட்டினதும் உள்விவகாரங்களில் நாம் தலையிடுவதில்லை; கருத்துக் கூறுவதும் இல்லை. வெளிநாடுகளின் - அவற்றுக்கு உரிய- இறையாண்மையை நாம் மதிக்கிறோம்- அதே வகையில் ஏனைய நாடுகளும் எமது தேசத்தின் இறையாண்மையில் தலையிட வேண்டியதில்லை என்பதே எமது விருப்பமாகும்.

சமூக இணக்கப்பாட்டுக்கான இலங்கையின் தேசியக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார்.

அமைச்சர் பீரிஸ் அங்கு தெரிவித்த கருத்துக்களில் பின்வருவனவும் கருத்தில் கொள்ளப்படக்கூடியன.

நீதியும் சட்டமும் சமமாக இல்லையேல், சமூகங்கள் இடையே விரக்தி நிலை தோன்றும். அவை நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் [அதாவது எல்லாப் பிரதேசங்களிலும்] சமமாக நிலவ வேண்டும்.

எமக்கு இடையில் வளர்ந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு உகந்த நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டும்.

நாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு எல்லோரிடமும் ஏற்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் உண்டான அரசியல் பிரச்சினைகளுக்கு எந்தப் பிரதேச அல்லது எந்த இன மக்களும் காரணர்கள் அல்லர். அரசியல் தலைவர்களும் அரசியல் வாதிகளுமே மூல காரணர்கள். மிகக் குறிப்பிட்டுக் கூறுவதானால், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களே மூவின மக்களிடையே பகைமையையும் குரோதத்தையும் வளர்த்துவிட்டனர். காலத்துக்குக் காலம் அவற்றின் வீச்சும் வேகமும் முறுக்கிவிடப்பட்டன.

அவற்றின் விளைவுகளே தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை, சமத்துவம், சக வாழ்வு என்பன தேய்பிறையாக மெலிந்து நலிந்து போனமைக்குப் பிரதான காரணம்.

நாட்டின் இறையாண்மையில் வெளியார் தலையீடுகள் குந்தகம் விளைவிக்குமோ என்று எமது வெளியுறவு அமைச்சர் மனதில் எழும் சந்தேகமும் உள்ளூறி உள்ள அச்சமும் அது எழும் நிலை தோன்றுவதற்கு மூலகர்த்தாக்கள், பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களும் அவர்களுக்கு பின்னூட்டல் வழங்கியவர்களுமே என்பதனை இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த 1948 ஆம் ஆண்டின் பின்னான அரசியல் வரலாறு பளிச்சென்று மின்னிக் காட்டுகின்றது.

தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் சிறுபான்மை இனங்களின் ஜனநாயக உரிமைகளை, அவர்களிடம் இருந்து பிரிக்கக் கூடாத உரிமைகளை பெரும்பான்மையினர் அல்லது பெரும்பான்மை இன அரசுகள் என்ற பலத்துடன் அடக்கி ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களே தேசிய நல்லிணக்கத்தை வெறிதாக்கி உள்ளன.

வெறுமனே பிரசாரத்துக்கும், இழைத்த பென்னம் பெரிய தவறுகளுக்கும் பிராயச்சித்தமாகவேனும்-

உண்மையான உறுதியான இன நல்லிணக்கத்தை உருவாக்குவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட மனங்கொண்டால், வெளிநாடுகளின்- அனைத்துலக நாடுகளின்- இறையாண்மை மீதான தலையீடுகள் குறித்து கிஞ்சித்தும் அஞ்சத் தேவையில்லை.

தேசிய நல்லிணக்கம் குறித்து அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மட்டுமன்றி நாட்டின் தலைவரான ஜனாதிபதியும் தமது சிந்தனைகளை வெளிப்படுத்தி வருகிறார்.

மிகச் சமீபத்தில் பதினைந்து இஸ்லாமிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களை, ராஜதந்திரிகளை அழைத்துப் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ-

இனவாத மற்றும் விரோதத்தைத் தூண்டும் சக்திகள் குறித்து தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் அவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

எப்படியோ, நலிந்து மெலிந்து போயுள்ள தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதில் உண்டாகும், உண்டாக்கப்படும் தாமதம்-

ஏன், உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் போக்கு-என்பன

தேசிய நல்லிணக்கத்தையும் நாட்டின் வளர்ச்சியையும் நலிவுறச் செய்யும் என்பதனை ஆட்சியாளர்கள் உணர்ந்து பிசிறின்றியும் மனப்பூர்வமாகவும் தூர நோக்குடனும் செயற்பட்டால், செயற்படுத்தினால், அது வெறும் சொற்றொடராக அன்றி நாட்டை, அதன் வளர்ச்சியை மேம்படுத்தும். அனைத்துலக நாடுகள் எமது உள்விவகாரங்களில் தலையிடுவதற்குத் தானாகவே தடையிடும். காலம் பதில் சொல்லும் என்று காத்திருக்காமல் செயற்பட வேண்டும்.

# குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம் வலி. கிழக்கு மக்களுக்கு பாதிப்பு

## ஆளணி இல்லை என்கிறார் பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம்,மே 2

வலி.கிழக்குப் பிரதேச சபை கடந்த நான்கு நாள்களாக இருபாலை, கோப்பாய் கிராமங்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைத் திடீரென நிறுத்தியுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் குடிதண்ணீர் இன்றிப் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

பிரதேச சபையின் பவுசர் மூலம் இந்தப்பகுதி மக்களுக்குத் தினமும் இரண்டு தடவைகள் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள நன்னீர் குழாய்க் கிணற்று நீர் மூலம் கடந்த சில வருடங்களாக தண்ணீர்



விநியோகிக்கப்பட்டு வந்தது. கடும் வறட்சியான இந்தக் காலத்தில் குடிதண்ணீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

''ஆளணி வசதி இன்மையாலேயே இந்த இக்கட்டான நிலைமை தோன்றியுள்ளது. பவுசர் சாரதி இன்மையால் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. தற்காலிக நியமனத்தில் இருந்த சாரதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இதற்கான மாற்று வழிகளைக் கையாளத் திட்டமிடப்பட்டு வருகிறது'' என்று வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் கூறினார்.

(ம-17)

# பொலிஸ் பதிவு இடம்பெறாமையால் வீடு செல்ல முடியாது நோயாளர்கள்

## வெற்றி விழா அணி வகுப்பு ஒத்திகைக்குச் சென்றனர் பொலிஸார்

> "19 ஆம் திகதி நடைபெறவுள்ள நான்காவது வெற்றி விழா நிகழ்வுக்கான அணிவகுப்பில் பங்குபற்ற பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் தமிழ் பொலிஸார் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மே 2

வைத்தியசாலையில் சிகிச்சை முடிந்தபோதிலும் பொலிஸார் பதிவை மேற்கொள்ளாததால் வீடு செல்லமுடியாத நிலையில் விடுதிகளில் நோயாளர்கள் காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்து விடுதியில் சிகிச்சை பெறுவோரே வீடு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகளில் பொலிஸாருக்கென தனியான நிலையங்கள் அமைக்கப்பட்டு பொலிஸார் அங்கேயே தங்கியிருந்து விடுதிகளுக்கு விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த நிலையில் வருவோரிடம் வாக்கு மூலம் பெற்று அறிக்கை சமர்ப்பிப்பது வழக்கம்.

கடந்த ஒரு வாரமாக பொலிஸார் அங்கு கடமையில் இல்லாததால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் சிகிச்சை முடிந்தும் வீடு செல்ல முடியாத நிலை நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி தலைமைப் பொலிஸ் அதிகாரி வன்னியாராச்சியுடன் தொடர்பு கொண்ட போது,

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நான்காவது வெற்றி விழா நிகழ்வுக்கான அணிவகுப்பில் பங்குபற்ற பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் தமிழ் பொலிஸார் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் வைத்தியசாலைகளில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் நிலையக் கடமைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைக்கு சென்ற பொலிஸார் மீண்டும் வரும் வரை வைத்தியசாலைகளின் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களின் பதிவுகள் மேற்கொள்ள மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது-என்றும் கூறப்பட்டது. (ம-9)

# கால்நடைகளுக்கான உணவுகளை சீனாவில் இருந்து இறக்கத் தடை

கொழும்பு, மே 2

சீனாவில் இருந்து கால்நடை உணவுகள், கால்நடை உற்பத்திகள் மற்றும் உயிரினங்களை இலங்கைக்குத் தருவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் பறவைக் காய்ச்சல் பரவிச் செல்வதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குமார டி சில்வா தெரிவித்துள்ளார்.

சீனாவில் கடுமையான வைரஸ் நோய் ஒன்று பரவியுள்ளதால் மிருகங்கள் அழிந்து போக வாய்ப்பு அதிகம் உள்ளதும் அந்த வைரஸானது கோழிகளிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் பரவுவதால் அத்தகைய நிலைப்பாட்டைத் தவிர்த்துக்கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

உலக உயிரின - சுகாதார அமைப்புகளுக்குக் கிடைத்துள்ள தகவல்களின் கீழ் உயிர்கொல்லிநோய்கள் நிலவும் நாடுகளிலிருந்தும் கால்நடைகளுக்கான உணவுகளைத் தருவிப்பதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். (ம-22)

# புத்திசிகாமணிக்கு 'சமூகஞானி' பட்டம்

யாழ்ப்பாணம், மே 2

முப்பத்தைந்து வருடங்கள் அரச சேவையில் பணிபுரிந்து இளைப்பாறிய சுப்பிரமணியம் புத்திசிகாமணிக்கு 'சமூகஞானி' எனும் கௌரவ உயர்பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் மு.கைலாயபிள்ளை தலைமையில் மணி விழா ஏற்பாடுகள் இடம்பெற்றன.

இதில் புத்திசிகாமணியின் அர்ப்பணிப்பான மகத்தான சேவையைப் பாராட்டி சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அலெக்சாண்டர் சூசைமுத்து 'சமூகஞானி' எனும் உயர்பட்டம் வழங்கி கௌரவித்தார்.(ம-41)

# வைத்தியசாலைகளின் குறைபாடுகளை கண்டறியப் பரிசீலனைக் குழு

கொழும்பு,மே 2

வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிவது தொடர்பாக பரிசீலனைக் குழு ஒன்றை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய எதிர்காலத்தில் குறைந்தபட்சமாக மாதம் ஒன்றில் இரு வைத்தியசாலைகளாவது உள்ளடங்கும் விதமாகப் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு [illegible] வுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய வைத்தியசாலைகளின் பணியாளர் குழுக்களில் பற்றாக்குறை நிலவுகிறதா, மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறதா, நோயாளர்களைப் பராமரிக்கும் சேவைகள் முறைப்படியாக வழங்கப்படுகின்றனவா, வைத்திய உபகரணங்கள் போதிய அளவில் வைத்தியசாலைகளில் உள்ளனவா என்பவை குறித்துப் பரிசீலிக்கப்படவுள்ளது என்று மேலும் கூறினார். (ம-22)

# ஆன்மிக நிகழ்வு

வடமராட்சி,மே 2

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நடத்திவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'வழிபாடு எது' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்படக் காட்சி

**சிறந்த குறும் படம் தெரிவு செய்யப் பட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன**

வவுனியா,மே.02

வடமாகாண மட்டத்திலான குறும் படக்காட்சியும், சிறந்த குறும்படத் தெரிவும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மாகாண மட்டத்தில் குறும்பட போட்டியை நடத்தியிருந்தது.

இப்போட்டியில் கிடைக்கப்பெற்ற சுமார் 36 குறும்படங்களே இன்றைய தினம் காட்சிப்படுத்தப்பட்டு சிறந்த குறும் படம் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என் ஸ்ரீதேவி தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-400)

# லண்டன் நகராட்சிதேர்தலில் யாழ்ப்பாணத்தவர் போட்டி



லண்டனில் நகராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடவுள்ளார்.

நகராட்சி மன்றத்துக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இத் தேர்தலிலேயே ஆளும் கடசியான கென்சவேட்டிவ் கட்சி சார்பில், யாழ்ப்பாணம் மட்டுவிலைச் சேர்ந்த த-அ. பாலலோஜனன் போட்டியிடுகிறார்.

இவர் மட்டுவில் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொன்னாலை சித்திவிநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,மே.02

பொன்னாலை சித்தி விநாய கர் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர் வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

( )


# பாராட்டுகின்றோம்

எமது கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் உயர் திரு. முருகேசு சந்திரகுமார் திருவையாறு வாழ் மக்களுக்காக பகல் பராமரிப்பு நிலையத்தையும் (முன்பள்ளி) மின் ஒளியையும் திருவையாறு மக்களுக்கு வழங்கியமைக்காக பாராட்டி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாராட்டுவோர்: திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கம்.

(35010) (45.6)

## கணினி திருத்தம்
COMPUTER REPAIR

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.

அழையுங்கள்:0779086737

**GUNAA BEST PC**

#52, HOSPITAL ROAD, JAFFNA.

## வெளிவந்து விற்பனையாகிறது

★ தேசிய பாடசாலை ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி- 450/-

★ கல்விமாணி பாடத்தெரிவு பரீட்சை வழிகாட்டி- 160/-

BY:-P.KAMALTHASAN

பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா வவுனியா-K.P.K., கஜன்.


ஓம் சிவ சிவாய பிரம்மனே நம

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18-04-2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கனகசபை சுப்பிரமணியம்

**(ஆச்சாரியார் சிறுவிளான்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 02.05.2013 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 03.05.2013 வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| மலர்வு | உதிர்வு: |
|---|---|
| 12 | 18 |
| 08 | 04 |
| 1940 | 2013 |

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி. 0771627241

(36953) (23-16)

குடும்பத்தினர்.

# 15 ஆம் நாள் இதய அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன் S. கௌரிசங்கரின் அன்புத் தந்தை



## சண்முகசாமி செந்தில்நாதன்

அகத்தில் தூய்மை கொண்டு இறைவனை வசமாக்கி
அறத்தில் தூய்மை கொண்டு அனைவரையும் அரவணைத்து
முன்னேற்றப் பாதையில் முயற்சியுடன் வாழ்ந்து வந்தாய்
உன் புன்னகையின் சொல் வந்தம் உனை செல்வந்தம் ஆக்கியது
இலட்சியப் பாதையில் வெற்றி கொண்டு வாழ்ந்த உன்னை
மரணம் என்னும் தடைக்கல் தள்ளியது பாறையினுள்
பேனாவின் உதவியுடன் எம்துயரைப் பகிர்கின்றோம்.

மண்ணில் 13.11.1944

விண்ணில் 16.04.2013

அன்புடன்
நண்பர்கள்

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியலட்சுமி செல்வராஜா



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்வராஜா 30.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்வராஜாவின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், நெடுங்கேணி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (நெடுங்கேணி)- வள்ளியம்மை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், லோகேந்திரன்(ஆஸ்திரேலியா), ராஜேந்திரன்(UK), லோகினி ஆகியோரின் பாசமிகு தாயும், யசோதையின் அன்பு மாமியும், சயூரனின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரல்லை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக (01.05.2013) புதன்கிழமை காலை 9 மணி முதல் வைக்கப்பட்டு, இன்று (02.05.2013) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பொரல்லை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

25½ , 32 ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06
077 651 3791, 011 236 0516

(C/9284) (6.11)

தகவல்:
பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவுகளில்....



மண்ணில் 05.02.1930

விண்ணில் 02.04.2013

## அமரர் சின்னத்தம்பி திசை வீரசிங்கம்

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/8806)(2.6)

உங்கள் நினைவில் வாடும்:
குடும்பத்தினர்.

பாரதி வீதி, கம்பர்மலை.

# மரண அறிவித்தல்

## திருமதி புவநேஸ்வரி நடராசா



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவநேஸ்வரி நடராசா நேற்று 01.05.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு நடராசாவின் அன்பு மனைவியும் புவிகரன், சுதாகரன், றோகினி, காலஞ்சென்ற சியாமினி மற்றும் காமினி, தயாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் கார்த்திகா, பிரதீபா, இராசகுமாரன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.05.2013 வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(36970) (23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் மீன்கள் திருடும் விசமிகள்

கொழும்புத்துறை,மே 2

பாஷையூர்ப் பகுதி கடற்றொழிலாளர்கள் மீன் பிடித் தொழிலை மேற்கொள்ளும் பகுதிகளில் கம்பு பட்டியிலுள்ள மீன்களை இனந் தெரியாதோர் திருடிச் செல்வதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தாம் நட்டுவிட்டு வரும் மீன் பட்டிகளில் உள்ள மீன்களை இரவோடு இரவாக அபகரித்துச் செல்லும் மனிதாபிமானமற்ற களவுகள் நீண்ட நாள்களாக இடம்பெற்று வருவதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதனால் மீன்கள் இன்றி ஏமாற்றத்துடன் திரும்பிவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சாப்பிட வழியின்றி சிரமமுற நேர்கிறது என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான திருட்டுக்களை நிறுத்த கடற்றொழிலாளர் சங்கங்கள் முன் வரவேண்டுமென தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-135)

## கண்ணீர் அஞ்சலி



வைத்திய நிபுணர்
Dr. சிவபாலன் சிவசுதன்
அவர்களின்
அன்புத் தந்தை
செல்வரத்தினம் சிவபாலன்
அவர்களின்
பிரிவுச் செய்தி
அறிந்து
துயரடைவதோடு அன்னாரின் பிரிவால்
துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண்-மேற்கு வைத்தியசாலை
(கெங்காதரன் வைத்தியசாலை)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2012 வரையும் அடகு வைத்துமீட்கப்படாத நகைகள், 15.06.2013, 16.06.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்துறை | - |
| நெல்லியடி | |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(J/8193)
(2.6)

## சிறுநீரகத்தை தரமறுத்தவர் கைதானார்

கொழும்பு,மே 2

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவருக்கு சத்திர சிகிச்சை மூலம் சிறுநீரகம் ஒன்றை மாற்றுவதற்கு தனது சிறுநீரகங்களில் ஒன்றைத் தருவதாக கூறி அதற்காக ஒரு லட்சம் ரூபா பணத்தையும் பெற்று, மருத்துவ பரிசோதனைகள் அனைத்துக்கும் சென்ற பெண் ஒருவர் பின்னர் சிறுநீரகத்தை வழங்க மறுத்ததையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு பெண் ஒருவர் சிறுநீரகத்தை வழங்க ஒப்புக்கொண்டுள்ளார். அதற்கான முற்பணமும் அவர் வாங்கியுள்ளார். எனினும் பின்னர் தனது சிறுநீரகத்தை வழங்க மறுத்துள்ளார்.

அதனையடுத்தே குறித்த பெண், நிதி மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## HNB அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிக்கிளை சுன்னாகம், மானிப்பாய், திருநெல்வேலி, சங்கானை, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கைதடி, வேலணை, கிளிநொச்சி தெற்கு ஆகிய கிளைகளில் **31.01.2012** இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் **04.05.2013, 05.05.2013** ஆகிய திகதிகளில் காலை 9.00 - மாலை 6.00 மணிவரை இல 76-78 K.K.S வீதியில் அமைந்துள்ள எமது சுன்னாகக் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு**

-ஹற்றன் நஷனல் வங்கி

# பிரதி பொலிஸ் மா அதிபர்கள் 3 பேருக்கு இடமாற்றம்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மூவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக்க சிறிவர்தன குறிப்பிட்டார்.

அதற்கமைய வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்தன வடமேல் மாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க, வடமேல் மாகாணத்திலிருந்து ஊவா மாகாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி விஜேகுணவர்தன, வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## பணியாளர் தேவை

கணினி கல்வி நிலையம் ஒன்றிற்கு (Clerk) லிகிதர் ஒருவர் தேவை.
தொடர்பு: 077 970 7322
German Language Academy,
Palaly Road, Jaffna.

## விற்பனைக்கு

MITSUBISHI CANTER 14 ½'
Body Aluminium (Japan)
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 305 3170

# மரண அறிவித்தல்

## தியோகு சிங்கராஜர்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)



சாரையடி, புலோலியைப் பிறப்பிடமாகவும் சதாசகாய மாதா கோயிலடி, துன்னாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகு சிங்கராஜர் நேற்றுமுன்தினம் (30.04.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி தியோகு - அந்தோனியா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அக்கினேஸ், திரேசம்மா, பிரகாசம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், றீற்றம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மேரி மற்றும் ராணி, யோகம், குமார் (டென்மார்க்) காலஞ்சென்ற சுசி மற்றும் குயின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் நேசராசா (இளைப்பாறிய த பால் ஊழியர் - பருத்தித்துறை), மகேந்திரம், யூலி (டென்மார்க்), ராமேஸ், (யூனியன் அஸ்ஸுரன்ஸ் - சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜெனிறோனேஸ் (டென்மார்க்), பிரியா (பிரான்ஸ்), யசோ (பிரான்ஸ்), சுசி (பிரான்ஸ்), றோய் (பிரான்ஸ்), செல்வக்குமார் (டோகா), றோவினா, நிலா, சிந்து (ஜேர்மனி), யூட் (ஜேர்மனி), நிறோ, தனு, நிதர்சன், அன்ரியா (டென்மார்க்), அன்றுயன் (டென்மார்க்), அம்பிறிமி (டென்மார்க்), கெல்வின் (பிரான்ஸ்), வவா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், கொன்சன் (கில்ஸ்ரன் ரவல்ஸ்), ஜெசின் (பிரான்ஸ்), கவி (டோகா), சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாத்தாவும், கிலிஸ்ரன், கபிஸ்ரன், அபி, கியூமன் (பிரான்ஸ்), நியூட்டன் (பிரான்ஸ்), அஸ்வினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.05.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு சாரயடி வேளாங்கன்னி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சதாசகாய மாதா கோவிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(36946) (45.6)

# லங்கா ரைல்ஸ் காட்சி அறை யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடங்கள்

★ கணக்கு எழுது வினைஞர்/ பொது எழுது வினைஞர்
Accounts Clerk / General clerk

இப்பதவிக்குப் பொருத்தமான தகைமையுடைய பெண்களிடம் இருந்து மட்டும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

★ கணினி தரவு இயக்குநர் (Data Entry Operator)

இப்பதவிக்குப் பொருத்தமான தகைமையும் அனுபவமும் உடைய 35 வயதிற்குட்பட்ட இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

★ விற்பனையாளர் (Sales Man /Sales Girls)

இப்பதவிக்குப் பொருத்தமான இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி: 08.05.2013**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர்,
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/8496)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினக் கூட்டத்தில் திரண்டனர் தொழிலாளர்

யாழ்ப்பாணம்,மே 2

மே தினமான நேற்று புதன் கிழமை நாட்டின் பல பாகங்களிலும் கூட்டங்களும் பேரணிகளும் நடைபெற்றன. அன்றைய தினம் பல்வேறு விடயங்கள் குறித்தும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

**கல்முனையில்**

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் 19 ஆவது மே தினக் கூட்டமும், பேரணியும் நேற்று புதன் கிழமை கல்முனையில் நடைபெற்றன.

இந்த மே தினக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் கல்முனை வை.சீ.ஏ. மண்டப முன்றலிலிருந்து சங்கத்தின் மே தினப் பேரணி நடைபெற்றது.

''அரச ஊழியர்களுக்கு 15,000 ரூபா சம்பள உயர்வு வழங்கு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்கு, வடமாகாண, கிழக்கு மாகாண மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை, தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கு, கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்து, தொடரும் ஊடகங்கள் மீதான அடாவடி, அடக்குமுறையை நிறுத்து'' என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைப் பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்ததுடன், கோஷமாகவும் அவற்றை எழுப்பியிருந்தனர்.

பெருந்தொகையான தொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்த மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசு காலம் தாழ்த்தாது மாநில சுயாட்சி வழங்குவதன் மூலமாக நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு சிந்திக்க வேண்டும்.

★ விலைவாசி உயர்வு காரணமாக பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு 1,5000 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

★ 2006 ஆம் ஆண்டு தொடக்கம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி (அலவன்ஸ்) அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படல் வேண்டும்.

★ நாள் சம்பளம் பெறும் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களுக்குரிய கொடுப்பனவு அதிகரிக்கப்படல் வேண்டும்.

★ ஓய்வூதிய திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்களின் மாதாந்த உதவித் தொகை அதிகரிக்கப்படல் வேண்டும்.

★ மத்திய அரசு மாகாண இணைந்த சேவையின் கீழ் அமைய, தற்காலிக, ஒப்பந்த சலுகை அடிப்படையில் கடமைபுரியும் ஊழியர்களை நிரந்தரமாக்குதல் தொடர்பில் அரசு கவனமெடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் புதிய சுற்றறிக்கையை பொது நிருவாக அமைச்சு வெளியிட வேண்டும்.

★ கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் கடமைபுரியும் தற்காலிக ஊழியர்களுக்கு பி.ஏ.சி 20/2009 சுற்றுநிருபத்துக்கு அமைவாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

★ கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளூராட்சி மன்ற அட்டவணைப்படுத்தப்படாத சிறு பணியாளர்களது பதவி உயர்வுத் திட்டத்தை அமுல்படுத்த உதவவேண்டும்.

★ வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற சிறுபணியாளர்களுக்குரிய பதவி உயர்வு திட்டத்தின் பிரகாரம் உரிய உள்ளூராட்சி சபைகளை நடைமுறைப்படுத்தக் கோரல்.

**மன்னாரில்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த மற்றொரு மேதினக்கூட்டம் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம்,சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி,இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள்,சர்வ மதத் தலைவர்கள்,விவசாய, மீன்பிடி,வர்த்தக சங்கங்களின் பிரதி நிதிகள்,பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்கு முறைகள், தற்போதைய அரசியல் நிலவரம்,தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதிவு தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் ஆகியவை தொடர்பில் அரசியல் பிரமுகர்களால் உரையாற்றப்பட்டது. (ச-30-12)

## மன்னாரில் நடைபெற்ற மே தினக்கூட்டத்தில்....





மன்னாரில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் காணலாம். (12)

## கிளிநொச்சியில் நடைபெற்ற மே தினக்கூட்டத்தில்....










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் [illegible] நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ந.குமரகுருபரன், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் ஆகியோர் உரையாற்றினர்.(பி)

## கொழும்பு மற்றும் மலையகத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களில்...







கொழும்பில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்கள் மத்தியில் உரையாற்றுவதையும் மலையகத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொண்டதையும் காணலாம்.


## கல்முனை, மட்டக்களப்பில்.....





மே தின ஊர்வலம் கல்முனை, மற்றும் மட்டக்களப்பில் நடைபெற்றபோது...

## யாழ்ப்பாணத்தில்....






புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிஸக் கட்சியின் மே தின ஊர்வலம் சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் ஆரியகுளத்தை வந்தடைந்தது.

## வவுனியாவில்.....





வவுனியாவில் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிஸக் கட்சி உட்பட 7 தொழிற்சங்கங்கள் இணைந்து மே தின ஊர்வலத்தை நடத்தின. கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. (402)

# சைக்கிள் பேரணியுடன் நேற்று சுன்னாகத்தில் மே தினப் பவனி

### புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிஸக் கட்சி ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், மே 2

புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிஸக் கட்சியின் ஏற்பாட்டில் மே தினப் பேரணி நேற்று சுன்னாகம் பொதுச் சந்தையிலிருந்து சைக்கிள் பேரணியாக யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி வளாகத்தை வந்தடைந்தது. சைக்கிளில் பேரணியாக வந்தோர் ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள், உழைக்கும் மக்களே ஐக்கியப்படுங்கள், மஹிந்த அரசே மக்களை ஒடுக்காதே, தமிழர் வாழ்வைச் சிதைக்காதே, அடக்கப்படும் மக்களே வெகுஜனப் பாதையில் அணிதிரள்வீர், பொருள்களின் விலைகளை உயர்த்தாதே, வாழ்க்கைச் செலவைக் கூட்டாதே, மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாதே, மக்களை இருட்டில் தள்ளாதே, வலி.வடக்கு மக்கள் நிலத்தை நிலப்பறிப்பு நடத்தாதே, மண்ணிலும் கடலிலும் மக்கள் வாழ்வைப் பறிக்காதே, தமிழ் மக்களை அடக்காதே, அரசியல் தீர்வை கொண்டு வா, எமக்கு வேண்டும் ஜனநாயகம், எமக்கு வேண்டும் இயல்பு வாழ்வு, விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாய விலை வழங்கு, அந்நிய இறக்குமதியால் விவசாயிகளை நசுக்காதே, தொழிலாளர் உரிமைகளை மறுக்காதே, தொழிற்சங்க உரிமைகளைத் தடுக்காதே, சம்பள உயர்வை வழங்கு, கல்வி, சுகாதாரத்தை தனியார் மயம் ஆக்காதே, இலவசக் கல்வியைச் சிதைக்காதே, இந்தியாவிடம் ஏமாந்தீர்; அமெரிக்காவிடம் ஏமாந்தீர், உழைக்கும் மக்கள் அனைவரும் வெகுஜனப் போரில் அணிதிரள்வோம்'' எனப் பல கோஷங்களை எழுப்பியவாறு பேரணி கே.கே.எஸ். வீதியூடாக யாழ்.ஸ்ரான்லி வீதியை வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து கட்சியின் வடபிராந்தியச் செயலர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் பொதுக்கூட்டமும் சிறப்புரைகளும் இடம்பெற்றன. (ச-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
09.02.1929

மறைவு
02.04.2013



## அமரர் கதிரவேல் இராஜேஸ்வரி

கடந்த (02.04.2013) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் கதிரவேல் இராஜேஸ்வரி அவர்களின் அந்தியேட்டி நிகழ்வானது இன்று (02.05.2013) வியாழக் கிழமை அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

50/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (36948/6.16)

க.நித்தியானந்தன் (மகன்)
கிராம அலுவலர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 05 1944



மறைவு
13 05 2012

## அமரர் செல்லத்துரை யோகநாதன்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/இணுவில் இந்துக்கல்லூரி)

காலத்தின் ஒளிவிளக்காய் எம்மோடு இருந்து
இன்று உயிரோடு உயிராய்
கலந்துவிட்ட தெய்வமே அப்பா
கண்முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனதுவோ
மண்ணைவிட்டு விண்சென்று
ஆண்டு ஒன்று ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை
மறப்போமா உங்கள் நினைவை

இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(36953)(2.6)

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



திருமதி
## சாந்தலிங்கம் கருணாதேவி

''வட்டப்பாதி'' புலோலி மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாதேவி நேற்று (01.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தலிங்கம் (உரிமையாளர் - அம்பாள் அரிசி ஆலை, தும்பளை) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவதீசன், ஜெகதீசன், செல்வதீசன், சோமதீசன், சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயும், சஜிதா, ரமேஸ்வரன், நித்தியா ஆகியோரின் மாமியும், நிதர்ஷன், ஹஜானனன், சதுஷன், சுதர்ஷனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''வட்டப்பாதியில்'' உள்ள அவரது இல்லத்தில் இன்று (02.05.2013) வியாழக் கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''வட்டப்பாதி''
புலோலி மேற்கு, புலோலி.
(35350) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 922 9086,
077 308 6724.

# சைவாலயக் கிரியை இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே 2

சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் பற்றிய கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப் பேரவையின் பெருந் தலைவர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீஷிதர் தலைமையில் முதல்நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

'சைவாலயக் கிரியைகள்' என்ற பொருளில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், ஆலய பரிபாலனம்' என்ற பொருளில் ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயரும், 'சைவாலய நிர்மாணம்' என்ற பொருளில் இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும் உரையாற்றுவர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் பேராசிரியர் ச.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரையும், நீதி அரசியல் அமைப்பு விவகார அமைச்சின் முன்னாள் ஆலோசகர் இ.பேரின்பநாயகம் தொடக்க உரையும் நிகழ்த்துவர்.

கருத்துரைகளை புவியியல் துறைத் தலைவர் கா.குகபாலன், பேரசிரியர் நா.ஞானகுமாரன், முகாமைத்துவ வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, கணினி பொறியியலாளர் சி.சக்திதரன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்துவர். (ம-1)

## முருகனூர் விநாயகருக்கு மீண்டும் பூசை

கிளிநொச்சி, மே 2

பல்வேறு காரணங்களால் தடைப்பட்டிருந்த வவுனியா முருகனூர் விநாயகர் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிறியதாக இருந்த இந்த ஆலயத்துக்கான கட்டட வேலைகள் கடந்த ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிலையில் திடீர் என பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டன. தற்போது இவற்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சு-421)

## நாட்டின் குடியரசு தினத்தை கொண்டாட ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 2

குடியரசு தினத்தை மே 22 ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.வீ.அபேகோன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி நிறுவனத் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் அலுவலர்கள் மத்தியில் தேசிய அரச பேரவையால் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு வரைபின் தயாரிப்பு இந்த வேலையை முன்னெடுத்துச் சென்ற தலைவர்களின் பங்களிப்பினை பாராட்டுதல், 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்புடன் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்துமுற்றாக சுதந்திரம் பெற்ற சுதந்திர நாடொன்றாக இலங்கை தேசம் மாற்றமடைந்தமை, மக்களின் பொருட்டு பொறுப்பு வாய்ந்த அரசொன்றாக இலங்கை மாற்றம் பெற்று வருகின்றது, எமது நாட்டுக்குப் பொருத்தமான நிர்வாக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கான தத்துவங்களினைப் பெறுதல் போன்ற விடயங்களைக் கவனத்தை செலுத்தி குடியரசு தினக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் குறித்த அண்[illegible] தள் உரையாற்ற வேண்டும் என்று சுற்றறிக்கையில் உள்ளது. (ம-9)

**தவறிவிட்டது** LG P-500 தொலைபேசி அடங்கிய பேர்ஸ் ஒன்று சித்திரை 29 அன்று பாசையூர் புனித அந்தோனியார் வீதியிலிருந்து யாழ். பிரதேச செயலகத்துக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே -021 221 9025/077 606 2596

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திலகராஜா ஜெகத்ஜனனி

(முன்னாள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் J/51, J/54 ஊர்காவற்றுறை)

தேற்றுவார் யாருமின்றி நினைவிழந்து - தினம்
தினம் கனவு வாழ்வோடு உன்முகம்
காண்கின்றேன்; நீ அறியாயோ!
என் ஜனாவே!

யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01.01.1942
மறைவு
06.05.2010
திதி:- அட்டமி



## அமரர் கலாபூஷணம் தம்பு சற்குருநாதன்

வயலின் இசைக்கோர் நாதமே
சற்குருநாத கானாமிர்தமே
மூன்று ஆண்டுகள் ஆனதப்பா
முன்னூறு ஆண்டுகள் ஆனாலும் – உங்கள்
முகாரி இராகம் எப்பொழுதும் கேட்குமப்பா.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு, சுன்னாகம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மேரி கெலன் அந்தோனிப்பிள்ளை (நல்லம்மா)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும்,யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி இல. 859/11 யை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மேரி கெலன் அந்தோனிப்பிள்ளை நேற்று (01.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.M அந்தோனிப்பிள்ளையின் (தலைமை ஆசிரியர்) அன்பு மனைவியும், றஞ்சிதமலர், இரவீந்திரன், குலேந்திரன் (கிளை முகாமையாளர், யாழ்.ப.நோ.கூ.சங்கம்), புவனேந்திரன், யோகேந்திரராணி (கொறற்றி), தேவேந்திரராணி, ஞானேந்திரராணி (வசந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரீனா (தேவி), மரியகொறற்ரா(செல்வதி), பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் யூட் அனோஜ், லௌசிக்கா, சரோன், சுகன்யா, நீரஜா, காலஞ்சென்றவர்களான சரண்யா, சுரேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அரசநாயகம், செல்வநாயகம், மனோன்மணி மற்றும் அருட்தந்தை மார்சல் இராசநாயகம் (குரு முதல்வர், பதுளை மாவட்டம்) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். தற்காலிக வதிவிடத்தில் இருந்து இன்று (02.05.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 859/11,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர் சார்பில்
A.N. குலேந்திரன் (மகன்.)
0776443564

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 அலகுக்குள் அதிகரிப்பில்லை

## 180 வரை நிவாரணம்; மின் கட்டண உயர்வில் திருத்தம்

### ஜனாதிபதியின் மே தின அறிவிப்பு



கொழும்பு, மே.2
''மின் கட்டண உயர்வில் திருத்தம் கொண்டுவரப்படும். 60 அலகுகள்வரை கட்டணத்தில் எவ்வித அதிகரிப்பும் செய்யப்படாது. 60 இலிருந்து 180 அலகுகள் வரை நிவாரணம் வழங்கப்படும்.'' - இவ்வாறு நேற்று அறிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

உத்தேச மின் கட்டண உயர்வு விவகாரம் நாட்டில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள நிலையில், நேற்று நடைபெற்ற மேதினப் பேரணிகளின்போதும் அதற்கு எதிராகக் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. இந்நிலையில், மேதினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசின் மேதினக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொரளை கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்றுமலை நடைபெற்றது.

பொரளையில் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

நான் மாணவனாக இருந்தபோதே மேதின ஊர்வலங்களில் கலந்துகொண்டிருக்கின்றேன்.

''தொழிலாளி, தொழிற்சங்க தலைவர், எதிர்க்கட்சியின் தலைவர், பிரதமர், ஜனாதிபதி என்ற அடிப்படையிலும் பல மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தாலும் இன்றைய மேதின நிலை மிகவும் முக்கியத்துவமானதாகத் திகழ்கின்றது.

''நாட்டை அபிவிருத்தி நோக்கி அழைத்துச்செல்வதற்கு பல திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இந்நிலையில் எமக்கு எதிராக விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

''ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு பலதுறைகளிலும் தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளோம். அதேவேளை, மின் கட்டணம் இன்னும் உயர்த்தப்படவில்லை. உயர்த்துவதற்கான யோசனையே முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த உத்தேச யோசனையில் மாற்றம் கொண்டுவரப்படும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

''60 வரையிலான அலகுகளுக்கு எவ்வித கட்டண அதிகரிப்பும் செய்யப்படமாட்டாது என்பதுடன், 60 அலகிலிருந்து 180 அலகுவரை நிவாரணம் வழங்கப்படும். அதற்கு அப்பாலும் நிவாரணங்களை வழங்குவது சம்பந்தமாக பரிசீலித்து வருகின்றோம்'' என்றும் ஜனாதிபதி தனது மேதின உரையில் குறிப்பிட்டார்.

அதேவேளை, பிரதமர் டி.எம். ஜயரத்ன, அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உள்ளிட்ட அமைச்சர்களும் இதன்போது உரைநிகழ்த்தினர். வவுனியா, யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியிலிருந்தும் மக்கள் கொழும்பு மே தின பேரணிக்கு வருகை தந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

மின்கட்டணத்தை குறைக்காவிடின்

# அரசுக்கு காலக்கெடு விதித்தது ஜே.வி.பி.

கொழும்பு, மே.2
''மின்கட்டணத்தைக் குறைப்பதற்கு மே மாதம் 20 திகதி வரை மட்டும் நாம் அரசுக்கு காலக்கெடுவிதிக்கிறோம். அதற்கிடையில் அரசு மின்கட்டணத்தைக் குறைக்காவிட்டால் 21 ஆம் திகதி முதல் நாடுமுழுவதும் பல போராட்டங்கள் வெடிக்கும்''- என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய தொழிற் சங்க மத்திய நிலையத்தின் தலைவருமான கே.டி.லால் காந்த எச்சரிக்கை விடுத்தார்.

தெஹிவளையில் நேற்று பகல் 12 மணியளவில் ஆரம்பித்த ஜே.வி.பியின் மே தின பேரணியில் சிவப்பு நிற ஆடை அணிந்திருந்த மக்கள் விசேடமாக மின்கட்டண உயர்வு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித்த ஹேரத், அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட ஜே.வி. பியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கங்கத்தினரும் கலந்து கொண்டனர். அதன்போது அங்கு கலந்து கொண்டு உரையாற்றிய லால் காந்த மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

இதன்போது மேலும் அவர் கூறியவை வருமாறு:-

இங்கு வேலைசெய்யும் ஒரு தோட்டத் தொழிலாளிக்கு இன்று வரையிலும் ஒழுங்கான வீடுகூட இல்லாமல் லயன்களிலேயே வாழ்ந்து வரும் நிலை காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொழிற் சங்க வேலைத்திட்டங்களுக்கு இந்த அரசு கைச்சாத்திடாமல் அங்குள்ள மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது. தற்போது ஒரு குடும்பத்திற்கு மாதாந்த வாழ்க்கைச் செலவாக 25,480 ரூபா கட்டாயம் தேவைப்படுகிறது. இந்த நிலையில் கூட அங்குள்ள தொழிலாளர்களுக்கு ஒழுங்கான சம்பளம் வழங்காமல் ஏமாற்றி வரும் அரசு, தற்போது மின்கட்டணத்தைப் பெரும் அளவில் உயர்த்தி மேலும் மக்களைத் திண்டாட வைத்துள்ளது. எவ்வளவு மின் சாரத்தை அமைச்சர்கள் பயன்படுத்தினாலும் 2 ஆயிரம் ரூபா மட்டுமே இந்த அரசு மின் கட்டணமாகப் பெறுகிறது. இது போன்ற செயற் பாடுகளை அரசு உடன்நிறுத்தி மக்களை வாழவிட வேண்டும்.

வரவுசெலவு திட்டத்திலிருந்து 6 வீத நிதியை கல்விக்கு ஒதுக்க வேண்டும்.

கோரிக்கைகள் வெற்றி பெற வேண்டிமெனில் நாம் அனைவரும் நிச்சயம் ஒன்றாகப் போராடியே ஆகவேண்டும் - எனக் கூறினார்.

# எழுச்சி கண்டது மே தினம் முடங்கியது தலைநகரம்

கொழும்பு, மே.2
சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியன தலைநகர் உட்பட நாடு முழுவதும் மே தினக் கொண்டாட்டங்களில் பெரும் உற்சாகத்துடன் ஈடுபட்டன. விசேடமாக கொழும்பில் பல இலட்சக் கணக்கான மக்களின் பங்கேற்புடன் எழுச்சி பெற்ற மேதினக் கொண்டாட்டங்களால் தலைநகரமே நேற்று முடங்கிவிட்டது.

தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதற்காக நாடு முழுவதிலிருந்தும் தலைநகருக்குப் படையெடுத்திருந்த மக்கள் ஆளுந்தரப்புக்கு ஆதரவாகவும், எதிராகவும் ஏட்டிக்குப் போட்டியாக கோஷங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். இந்தக் கொண்டாட்டங்கள் அனைத்தும் பலத்த பொலிஸ் பாதுகாப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, ஐக்கிய தேசியக் கட்சி, பொது எதிர்க் கட்சிகள், ஜே.வி.பி., அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, இ.தொ.கா, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், சோசலிஷக் கட்சி, சோசலிஷ முன்னணி, லங்கா சம சமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி, முன்னிலை சோசலிஷக் கட்சி முதலான அரசியல் கட்சிகளும், தொழிற் சங்களும் மே தினப் பேரணிகளையும், கூட்டங்களையும் நடத்தின.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தாமரைத் தடாகத்தடியில் பகல் 12.55 மணியளவில் ஆரம்பமான அரசின் மேதினப் பேரணியில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் சுமார் 8 இலட்சத் துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர். பார்க் மைதானத்தில் 3.00 மணியளவில் ஆரம்பமான கூட்டம் 6.30 மணியளவில் முடிவடைந்தது.

**ஐக்கிய தேசியக் கட்சி**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தமது மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் மூன்று இடங்களில் ஏற்பாடு செய்திருந்தது. அதன் பிரதான மே தினப் பேரணியும், கூட்டமும் பொது எதிர்க்கட்சிகளின் தலைமையில் குருநாகலில் இடம்பெற்றது. இருப்பினும், கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவிலும், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் பதுளையிலும் மே தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**

கிளிநொச்சியில் இடம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்திலும், பேரணியிலும் வடக்கிலுள்ள பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சிறிதரன், அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஜே.வி.பி.**

தெஹிவளையில் நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமான ஜே.வி.பியின் மேதினப் பேரணி, கொழும்பு பீ.ஆர்.சி மைதானத்தில் இடம்பெற்றது.

**தேசிய சுதந்திர முன்னணி**

ஆளுந் தரப்பின் பங்காளிக் கட்சியான அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, மாளிகாவத்தையில் தமது மேதினக் கூட்டத்தை நடத்தியது.

**ஜனநாயக மக்கள் முன்னணி**

கொழும்பு குணசிங்கபுரவில் இடம்பெற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தினக் கொண்டாட்டத்தில் கொழும்பு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலுமுள்ள கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். கட்சித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இடம்பெற்ற மே தினக் கொண்டாட்டத்தில் கட்சியின் உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நவ சம சமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.




ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கூட்டு மே தின நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# விமலின் மே தினக் கூட்டத்தில் பான் கீ- மூன், நவநீதம்பிள்ளை

## 13 இற்கு எதிராகவும் கோஷம்

கொழும்பு, மே.2
அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்ட ஊர்வலத்தில் வடமாகாணசபைத் தேர்தலுக்கு எதிராகவும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திலுள்ள பொலிஸ், காணி அதிகாரங்களுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பப்பட்டது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரின் உருவப் படங்களைத் தாங்கி விமலின் ஆதரவாளர்கள் அவர்களுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

அதேவேளை, படுகொலை செய்யப்பட்ட லிபிய ஜனாதிபதி கடாபி, உயிரிழந்த வெனிசுலா ஜனாதிபதி ஆகியோரின் உருவப்படங்களும் தேசிய சுதந்திர முன்னணியின் பேரணிகளின்போது ஊர்வலமாக எடுத்துவரப்பட்டன.

தேசிய சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டம் மாளிகாவத்தை மைதானத்தில் நடைபெற்றது.

# கற்பிட்டியில் சடலம் மீட்பு

கொழும்பு, மே.2
கற்பிட்டி, முகத்துவாரத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற கற்பிட்டி பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் இது வரை அடையாளம் காணப்படவில்லை

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9A சித்தி பெற்ற க. பொ. த [சா/த] மாணவர்களே!

### உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

கடந்தமாதம் வெளிவந்த சா/தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 9A சித்தி பெற்று நமக்கும், நமது குடும்பத்திற்கும், நமது ஊருக்கும், பாடசாலைக்கும் பெருமையைச் சேர்த்த சாதனையாளர்களே! உங்களை பேட்டி காண்பதன் ஊடாக உங்கள் அனுபவங்களையும், கருத்துக்களையும் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பயன்பெறும் நோக்கில் முற்றிலும் O/L மாணவர்களுக்காக வெளிவரும் முன்னணி கையேடான வெற்றிப் படியின் முகப்புப் பக்கத்தில் புகைப்படத்துடன் பிரசுரம் செய்து பாராட்டி வாழ்த்தும் வெற்றிப்பா ர் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

இதன்போது நீங்கள் கற்ற பாடசாலையும் அதன் புகைப்படமும் வெற்றிப்படி முகப்பில் பிரசுரம் செய்யப் பட்டு உங்கள் பாடசாலையையும் வாழ்த்த தீர்மானித்துள் ளோம். எனவே, ஆர்வம் உடைய மாணவர்கள் தங்கள் புகைப்படத்துடன் விபரங்களை (தொலைபேசி இலக்கம் உட்பட) கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும். பாடசாலை கள் அனுப்ப விரும்பின் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் 9A பெற்றிருப்பின் குழுப்படமும், சிறந்த மாணவனின் தொலைபேசி இலக்கத்தையும், பொறுப்பாசிரியரின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**ஆசிரியர் - வெற்றிப்படி**
**இல. 85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**
**தொடர்புகளுக்கு: 071 4273035 / 077 2374191**



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
**021 567 1111**
advt@uthayan.com



## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் வேகமாக வளரும் U.A.E யை மையமாகக் கொண்ட எமது நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

★ விநியோகஸ்தர்கள் ★ மேற்பார்வையாளர்கள்
★ உதவி முகாமையாளர் ★ முகாமையாளர்

* க.பொ.த.சாதாரணதரம் போதுமானது. மாதாந்த வருமானம் 30,000 தங்குமிட வசதி இலவசம்.
* நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**021 221 9995/ 075 098 5088**
**275 1/3, Clock Tower Road, Jaffna.**


## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக செயலாளர் புவனேந்திரன் ரமேஸ்வரனின் அன்பு மாமியார்

**திருமதி சாந்தலிங்கம் கருணாதேவி**

அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வதிரி, கரவெட்டி.
077 864 8213

தலைவர்
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.

(C/8805)(6.11)


## மா மரத்தூசு தேவை

காளான் பாம் ஒன்றிற்கு ஏனைய மரத்தூசு கலக்காத மா மரத்தூசு தேவை. தகுந்த பெறுமதி வழங்கப் படும். இதற்காக அரிவு ஆலை உரிமையாளராகிய தங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: [illegible]
[illegible] 077 151 6013



## வாடகைக்கு

யாழ்நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் (உங்கள் தேவைக்கேற்றவாறு வடிவமைக்க) வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய 3 மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதி வாடகைக்குண்டு (அலுவலகப் பயன்பாட்டிற்கு மிகவும் உகந்தது)


தொடர்பு: 077 730 1392
மின்னஞ்சல்: malavar 2@yahoo.com


## மரண அறிவித்தல்

ஸ்ரீ வல்லிபுரேசாய நமஹ!

திருவடி சேர்ந்த அன்னை

**திருமதி சாமிக்குருக்கள் வாலாம்பிகையம்மா**



யாழ்.சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், துன்னாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாமிக் குருக்கள் வாலாம்பிகை யம்மா 30.04.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிக்குருக்களின் துணைவியும் ராஜேஸ்வரி, சண்முகநாதக்குரு, ஜெயதீஸ்வரி, அப்பு, ரகுபதிக்குரு, காலஞ்சென்ற ஜெயந்தி நாதன், சாருநாதன், ஜெகதா ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற குமாரசாமிசர்மா மற்றும் தண்டாபாணிசர்மா, ராஜி, லதா, தேவிகா, சந்திரக்குருக்கள் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01-05-2013) புதன்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, மந்திகை கருகம்பன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னையூர்.

தகவல்:
ரகுபதிக் குருக்கள் மற்றும்
பிள்ளைகள் 077 577 0337

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
13*02*1930
ஆண்டவன் அடியில்
02*04*2013

**அமரர் தவமணி பரமசாமி**

எமது அன்புத் தெய்வத்தின் உயிர் பிரிந்த வேளை தோளோடு தோள் நின்று உதவியவர்களுக்கும் மலர்கள், மலர் மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர்களுக்கும், தொலைபேசி, தந்திகள் மூலம் துன்பத்தைப் பகிர்ந்துகொண்டு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (02.05.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

190 ஆம் கட்டை,
[illegible] மேற்கு,
சாவகச்சேரி.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org